(ii) who has been convicted of an offence, or been guilty of misconduct, which in the opinion of the Market Committee, affects the said person's integrity as a man of business;

(iii) in regard to whom the Market Committee is satisfied after such enquiry as it considers adequate, that he is a *benamidar* for, or a partner with, any other person to whom a licence may be refused under clause (i) or (ii);

(iv) if the Market Committee is of the opinion that the grant of the licence in respect of any place situated within a distance of five miles from the notified market area is likely to affect the levy of cess under section 15 or the transaction of sale or purchase of the notified agricultural produce in the market.

Except the provision regarding benamidar, the other provisions are too drastic and a source of hindrance to the agriculturists.

I also emphasise the reasons given by the previous speakers that the powers given to the officers of the Committee are too drastic, and are likely to introduce corruption among the officers employed by the committees and result in considerable harassment of the agriculturists. The cadre of the officers such as Senior Inspectors or Deputy Tahsildars who are proposed to be empowered under this measure has not been mentioned. Any harassment likely to be caused to the agriculturists should be avoided.

We have got to decide upon two things. We have now got the Co-operative Marketing Societies and the Market Committees. If in a particular area there is a Co-operative Marketing Society, I would suggest that there should be no Market Committee. We should either have this or that. We cannot have both in the same area. The hon. Member Sri Lazar said that even the Co-operative Marketing Societies should be asked to take out licences under the Act. That is one way of bringing them within the ambit of the Act. If we are really interested in developing the spirit of co-operation among the people, it is better we fix definite areas for the societies and avoid introducing these Marketing Committees in such areas.

In this connection it may not be out of place for me to suggest that in all Select Committees a lawyer member is put in. He will be helpful in the detailed consideration of the clause of

[Sri R. Srinivasa Iyer] [30th April 1959

the Bill. I am myself a lawyer and I should not plead for lawyers. But now they are taboo and they are not required for anything and they are not also allowed to appear in courts.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may inform the hon. Member that we make no distinction between lawyer and non-lawyer members of this House. Every member of this House whether a lawyer or a non-lawyer is competent to legislate, is competent to scrutinize Bills and make necessary corrections.

* SRI R. SRINIVASA IYER : I never meant anything against any legislator. In fact I was only suggesting that it will be better to have a lawyer member on the Committee. I never suggested that anybody is incompetent to legislate. Everybody is competent. In fact I was about to suggest that even the Advocate-General may be asked to appear before the Committee. Therefore when I said that a lawyer member may be put in the Committee, I only made it as a sort of suggestion. Whether it will be accepted by the Government or not is another matter.

With these words I finish my speech, Sir.

SRI K. S. SUBRAMANIA GOUNDER : கனம் தற்காலிக சபாநாயகர் அவர்களே, இது, விவசாயிகளுடைய விளைபொருள்களை விற்பதற்கு ஒரு முக்கியமான சட்டமாகும். ஆனால் விவசாயிகளுடைய விற்பனைப்பொருள்களை விற்பதற்கு இப்பொழுது இரண்டு ஸ்தாபனங்கள் இருக்கின்றன என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒன்று, ரெகுலேட்டட் மார்க்கட். மற்றொன்று, கூட்டுறவு விற்பனை சங்கம். எந்தவிடத்தில் ரெகுலேட்டட் மார்க்கட் நல்லமுறையில் வேலை செய்கிறதோ அந்தவிடத்தில் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு இடமே யில்லையென்று நிச்சயமாகச் சொல்லலாம். மற்றும், எந்தயிடத்தில் கூட்டுறவு விற்பனை சங்கம் நல்ல முறையில் வேலை செய்கிறதோ அந்தயிடத்தில் ரெகுலேட்டட் மார்க்கட்டிற்கு வேலையேயில்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். ரெகுலேட்டட் மார்க்கட்டில் அரசாங்கத்தின் உதவி இருக்கிறது. அரசாங்கமும் அதற்காக சிப்பந்திகளைப் போட்டு எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்கிறார்கள். அதேசமயத்தில் கூட்டுறவு மார்கட்டிங் சொஸைட்டிகளிலும் அரசாங்கம் சிப்பந்திகளைப் போட்டிருக்கிறார்கள். அதற்காக, சிப்பந்திகளுக்காக மான்யம் கொடுக்கிறார்கள். அரசாங்கத்தின் பங்குத் தொகை கூட்டுறவு மார்கட்டிங் சொஸைட்டிகளுக்கு கொடுக்கப்படுகிறது. கோடவுன் கட்டுவதற்கு ஸப்ஸிடி, கடன் கொடுக்கப்படுகிறது. "ப்ரோஸஸிங் ப்ளான்ட்ஸ்" வைக்க கடன்கள் எல்லாம் கொடுக்கப்படுகிறது. இப்பொழுது உடனடியாக அரசாங்கம் ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். ஒன்று, கோவாப்பரேட்டிவ் மார்கட்டிங் சொஸைடிகளை வைத்துக்கொள்கிறார்களா அல்லது ரெகுலேட்டட் மார்க்கட்டை வைத்துக் கொள்கிறார்களா என்ற விஷயத்தில் ஒரு முடிவிற்கு வர வேண்டும். ரெகுலேட்டட் மார்கட்டை வைத்துக் கொள்கிறார்கள் என்று முடிவெடுத்தால் கோவாப்பரேடிவ் மார்கட்டிங் சொஸைட்டிக்கு இடமில்லை என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். கோவாப்

30th April 1959] [Sri K. S. Subramania Gounder]

பரேட்டிவ் மார்கட்டிங் சொஸைட்டிதான் வைக்கப் போகிறேம் என்ற அளவில் சொன்னுல் இம்மாதிரி ரெகுலேட்டட் மார்கட்டிற்கு தேவையில்லை. அதை பூர்ணமாக வேறு முறையில் திருத்தியமைக்கவேண்டும். இரண்டையும் வைத்து வேலை செய்வது என்ருல் ஒன்ரேடொன்று போட்டி போட்டுக் கொண்டு இரண்டும் வளர முடியாத அளவிற்கு ஆகிவிடுகிறது என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இப்பொழுது கூட்டுறவு மார்கெட்டிங் சொஸைடி ரெகுலேடட் மார்கெட் என்ன செய்கிருர்களோ அத்தனை காரியங்களையும் செய்கிருர்கள். அது மாத்திரமல்ல. விவசாயிகள் விவசாயப் பொருள்களை விளைவு செய்வதற்குக் கடன் கொடுக்கிருர்கள். அதுதான் "இன்டெக்ரேடட் கிரெடிட்" என்ற முறையிலே இப்பொழுது பிளானிங் கமிஷன் கூட்டுறவு மார்கெட்டிங் எந்த அளவுக்கு வளரவேண்டும் என்று "டார்ஜெட்" நிர்ணயித்திருக்கிருர்கள். மெம்பர்கள் இவ்வளவு பேர்கள் சேரவேண்டும், விவசாயப் பொருள்களை கூட்டுறவு மார்கெடிங் சொஸைடிகள் எவ்வளவு வாங்க வேண்டும், இன்னும் "இன்டெக்ரேடட் கிரெடிட்" கடன் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதற்கெல்லாம் பிளானிங் கமிஷன் டார்ஜெட் நிர்ணயித்திருக்கிருர்கள். இந்த அளவிலே நாம் பார்க்கும்போழுது, ரெகுலேடட் மார்கெட்டை, இப்பொழுது இருக்கக்கூடிய அளவிலே இன்னும் சட்டத்தை திருத்தி அமைத்தால் எந்த அளவிலே கூட்டுறவு விற்பனை சங்கங்களைப் பாதிக்கும் என்பதை கவனிக்கவேண்டும். அரசாங்கத்தினிடம் இருக்க கூடிய திட்டங்களெல்லாம் பிரயோஜனம் இல்லாமல் போவதற்கு இதிலே இடம் இருக்கிறது என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் முன்பு குறிப்பிட்டதுபோல், ரெகுலேடட் மார்கெட் என்ன செய்கிருர்களோ, அத்தனை காரியங்களையும் கூட்டுறவு மார்கெட்டிங் சொஸைடிகள் செய்கின்றன. அது மாத்திரமல்ல, கடன் கொடுக்கிருர்கள் விவசாயிகள் பொருள்கள் விளைவிப்பதற்கு. அதே சமயத்தில் விவசாயப் பொருள்களை வந்தவுடனே கூட்டுறவு மார்கெட்டிங் சொஸைடி பணத்தை விவசாயிகளுக்குக் கொடுத்து, பிறகு விவசாயிகளிடமிருந்து வசூலிக்கிருர்கள். விவசாயிகளுக்கு உடனே பணத்தைக் கொடுக்கிருர்கள். சரியான எடை, அளவு இவைகளைக் கையாளுகிருர்கள். சரக்குகளை தேக்கி வைப்பதற்கு கூட்டுறவு சங்கங்களில் "கோடவுன்" வசதி இருக்கிறது. அம்மாதிரி ரெகுலேடட் மார்கெட் கூட செய்து கொடுக்கலாம். அதுபற்றி நான் சொல்லவில்லை. இன்னும் அத்துடன் சில நாட்கள் சரக்குகளை தேக்கிவைக்கவேண்டுமானுல், கூட்டுறவு மார்கெடிங் சொஸைடி அதற்குக் கூட வசதி செய்துகொடுக்கிருர்கள். லோன் வேண்டுமானுல் லோன் கொடுக்கிருர்கள். அம்மாதிரி வசதி ரெகுலேடட் மார்கட்டில் கிடையாது. அதுமாத்திரமல்ல. விவசாயிகள் உடனடியாக சரக்குகளை விற்றுவிட்டால் மட்டும் போதாது. அதற்கு "ப்ரொஸெஸிங் பிளாண்டு" வைத்து, "பை ப்ராடக்டு" செய்து விற்ருல், நல்ல முறையில் லாபம் அதிகமாகக் கிடைக்கும். அதற்காக அரசாங்கத்தினிடமிருந்து கடனும், மான்யமும் பெற்று "பை ப்ராடக்ட்ஸ்" செய்து விற்பதற்கு கூட்டுறவு மார்கெடிங் சொஸைடிக்கு வசதி இருக்கிறது. அம்மாதிரி வசதி ரெகுலேடட் மார்கெட்டில் இல்லை.

இப்பொழுது அரசாங்கம் செய்யவேண்டிய முடிவு என்னவென்ருல், எந்த முறை இருந்தால் விவசாயிகளுக்கு உண்மையிலேயே பயன் அளிக்கும் என்பதுதான். ஏதோ 'கமர்ஷியல் கிராப் மார்கெடிங் ஆக்ட்' என்று அளவிலே ஒன்று இருந்தது. அதைத் திருத்தி அமைப்பதற்காக ஒரு கமிட்டி போடப்பட்டது. அந்தக் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிருர்கள். அந்த சிபார்சை வைத்துக்கொண்டு, இந்த மசோதா கொண்டுவரவேண்டுமென்ற

[Sri K. S. Subramania Gounder] 30th April 1959]

அடிப்படையில் இந்தப் பிரச்னை இருக்கக்கூடாது என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் கூட்டுறவு மார்க்கெட்டிங் பொறுத்த வரையிலே நாராயணசாமி பிள்ளை கமிட்டி, ஸர் டி. விஜயராகாவாச்சாரியார் கமிட்டி இவர்கள் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். கமர்ஷியல் கிராப் மார்க்கெடிங் ஆக்டை பொறுத்த அளவிலே கிருஷ்ணசாமி கமிட்டியார் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக விவசாயப் பொருள்களை எம்மாதிரி முறையில் விற்கவேண்டுமென்று எந்தக் கமிட்டியும், நிபுணர்களும் உட்கார்ந்து பரிசீலனை செய்யவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு சட்டத்தைக் கொடுத்து, அதற்கு மேல் திருத்தம் பற்றி அபிப்பிராயம் சொல்லவேண்டுமென்றால், அந்த சட்டத்தை வைத்துக்கொண்டுதான் அவர்கள் சொல்லுவார்கள், பொதுவாக எடுத்துக்கொண்டு சொல்லுவதில்லை. அதுவும் குறிப்பாக இரண்டிற்கும் போட்டி இருக்கிறது. தென் ஆற்காட்டில் ரெகுலேடட் மார்க்கெட் நல்ல முறையிலே வேலை செய்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், ரெகுலேடட் மார்க்கெட் வருவதற்கு முன்னால் கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைடிகள் அங்கு நல்ல முறையிலே வேலை செய்தன. அதை எல்லோரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ரெகுலேடட் மார்க்கெட் நல்ல முறையில் வேலை செய்ய ஆரம்பித்தால், கூட்டுறவு மார்க்கெட் சொஸைடிகள் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, நான் சொல்லுவதில் ஒன்றும் மிகையில்லை. சேலம் ஜில்லா கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைடிகள் நல்ல முறையில் வேலை செய்துகொண்டு வருகின்றன. அங்கே ரெகுலேடட் மார்க்கெட்டுக்கு அவசியம் இல்லை. அங்கு மார்க்கெடிங் சொஸைடிகள் நல்ல முறையில் வேலை செய்கிற பொழுது ரெகுலேடட் மார்க்கெட்டை விட்டுவிடலாம் என்று விட்டுவிடுகிறார்கள்.

மற்றொன்று, கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைடிகளுக்கு சரக்குகள் தானாகவே வருகின்றனவே தவிர, எந்த விதத்திலும் நிர்ப்பந்தம் இல்லாமல் இருக்கிறது. என்னைப் பொறுத்த அளவிலே, என்னுடைய அபிப்பிராயம் ஓரளவுக்கு "இன்டைரக்ட் கம்பல்ஷன்" அவசியம் என்பதுதான். அக்ரிகல்சரல் ப்ராடியூஸ் மார்க்கெட்ஸ் சட்டத்திலே, அதை நிர்வகிக்கக்கூடிய பொறுப்பை கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைடிகளிடம் பொதுவாக ஒப்படைத்து விட்டால் மிகவும் நல்ல முறையில் நடக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏதோ கூட்டுறவு சம்பந்தமாக ஒருவரை இந்தக் கமிட்டியிலே போடுவதினாலே கூட்டுறவு மார்கெட் எந்த அளவிலும் விருத்தி அடைவது இல்லை. இதனால் அரசாங்கத்திற்கு ஒரு ஒத்துழைப்பு இருக்கும் என்று கருதவே முடியாது. இந்த சட்டத்தை நிர்வகிக்கக்கூடிய பொறுப்பை தனியாக ஒரு ரெகுலேடட் மார்க்கெடிங் கமிட்டிக்கு விடுவதற்குப் பதிலாக, இந்தப் பொறுப்பை பூராவும் கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைடியிடம் ஒப்படைத்துவிட்டால், நல்ல முறையில் வேலை செய்ய முடியும். இந்த முறையில் சர்க்கார் என்ன எதிர்பார்க்கிறார்களோ அதைவிட பணமும் அதிகமாக எதிர்பார்க்க முடியும். இம்மாதிரி மத்திய பிரதேசத்தில் 4 தாலுகாக்களில் ரெகுலேடட் மார்க்கெட் பூரா அதிகாரத்தையும் மார்க்கெடிங் சொஸைடிக்குக் கொடுத்து, அது மிகவும் நல்ல முறையில் நடந்துவருகிறது என்று நான் அறிகிறேன். அந்த அளவிலே நம்முடைய ராஜ்யத்திலும் இருந்தால், கூட்டுறவு இயக்கமானது நம்முடைய ராஜ்யத்திலே மிகவும் நல்ல முறையிலே நடக்கிறது என்ற காரணத்தினாலே இது மிகவும் நல்ல முறையிலே நடப்பதற்கு சாத்தியமாக இருக்கும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அதுமாத்திரமல்ல, பம்பாய் ராஜ்யத்தில் இந்த "அக்ரிகல்சரல் ப்ராடியூஸ் மார்க்கெடிங்" கூட்டுறவு ரிஜிஸ்டிராரின்கீழ் நடைபெறுவதாக நான் கேள்விப்படுகிறேன். ஆகவே, இந்த ரெகுலேடட் மார்க்கெட் சட்ட நிர்வாகமும் கூட்டுறவு ரிஜிஸ்டிராரின் கீழ் இருந்தால் மிகவும் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்

30th April 1959] [Sri K. S. Subramania Gounder]

கொள்ளுகிறேன். ஏனென்றால், இரண்டும் தனித்தனி இலாகாவாக இருந்து பரிபாலிக்கும்பொழுது ஒன்றுக்கு ஒன்று நிச்சயமாக பாதகம் ஏற்படுவதற்கு வசதி இருக்கிறது. ஆகையினால், இதை கூட்டுறவு ரிஜிஸ்டிரார் அவர்களுக்கு விட்டுவிடுவது மிகவும் நன்மையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தெந்தப் பொருள்களை இந்த சட்டத்தின்கீழ் கொண்டு வரலாம் என்பதைப் பொருத்தவரையிலே ஸ்ரீ சின்னதுரை அவர்களும், ஸ்ரீ சீனுவாசய்யர் அவர்களும் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். பொதுவாக அரசாங்கம் எந்தெந்தப் பொருள்களை இந்த சட்டத்தின் கீழ் கொண்டுவந்தால் விவசாயிகளுக்கு சௌகரியமாக இருக்கும் என்று கருதுகிறார்களோ அந்தப் பொருள்களைத்தான் இதன் கீழ் கொண்டுவருவார்களே தவிர, எல்லாப் பொருள்களையும் இதன் கீழ் கொண்டு வரவேண்டுமென்று அரசாங்கம் நிச்சயமாக முடிவு செய்யவே செய்யாது. அரசாங்கம் " ஸ்டேட் டிரேடிங்கோ " அல்லது வேறு ஏதாவது செய்வதற்கோ இதிலே ஒன்றும் சம்பந்தம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ரெகுலேடட் மார்கெட்டாக இருந்தாலும் சரி, கூட்டுறவு மார்கெட்டாக இருந்தாலும் சரி, வியாபாரிகள் வருகிறார்கள், விவசாயிகள் சரக்குகளைக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் கொண்டு வரும் சரக்குகளை இருவருக்கும் பாரபட்சமில்லாமல் லாபகரமாக இருக்கும்படி அதிக விலைக்கு விற்றுக்கொடுப்பது இந்த ஸ்தாபனங்களின் வேலையே தவிர, ஏதோ அரசாங்கமே வாங்கி விற்று வியாபாரம் செய்வது என்பது இல்லை. நான் முன்பு சொன்னதுபோல், இப்பொழுது இருக்கக்கூடிய முறையிலே விவசாயிகள் தங்களிடம் இருக்கும் சரக்குகளைக்கொண்டு வருகிறார்கள். அதை விற்றேமானால் அதிகமான லாபம் இல்லவே இல்லை. ஏதோ வரக்கூடிய லாபம் நேரடியாக விவசாயிகளுக்குப் போய்ச்சேரக்கூடிய முறையில் செய்தால்தான் உண்மையிலேயே விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே, இந்த மசோதாவை இந்த அளவிலே பூரணமாக திருத்தி அமைத்து, நிர்வாகப் பொறுப்பை கூட்டுறவு மார்கெடிங் சொசைடியின் கையிலேயே ஒப்படைத்து விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

Sri V. SANKARAN: தற்காலிக தலைவர் அவர்களே, இந்த மார்கெடிங் கமிட்டி அமைப்பின் விஷயத்தைப்பற்றி கனம் சீனுவாசய்யர் அவர்கள் சொன்னார்கள். சர்க்காரே நேராக மார்கெடிங் கமிட்டி மெம்பர்களை நியமனம் செய்வதிலே எவ்வாறு அனுகூலம் இருக்கிறது என்றும், இப்பொழுது போட்டிகள் ஏற்படுகின்றன, குறுகிய மனப்பான்மை ஏற்படுகிறது என்றும் சொன்னார்கள். அது ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம்தான். இன்னொரு ' பாயிண்டு ஆப் வியூ ' வையும் நன்றாக பார்க்க வேண்டும். " டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் ", " ரெகமென்டேஷன் " செய்து அந்தந்த " நோடிபைடு எரியா " விலுள்ள " ப்ரொட்யூஸர் " ஒன்பது பேர்களையும் விற்பனைத் தொழில் நடத்தும்படியான இடத்திலிருந்து நான்கு பேர்களையும் எடுத்து, ஆக 13 பேர்கள் கொண்ட கமிட்டி போட வேண்டுமென்று சொல்லப்படுகிறது.

வியாபாரிகளிடமிருந்து நான்கு பேர்களையும் விற்பனையாளர்களிடமிருந்து நான்கு பேர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையில் தேர்ந்தெடுப்பதற்கு அக்ரிகல்சரல் டைரக்டர் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் அக்ரிகல்சரல் டைரக்டர் தேர்ந்தெடுத்தால், வியாபாரிகளின் உண்மையான பிரதிநிதி யார், விற்பனையாளர்களின் உண்மையான பிரதிநிதி யார் என்பதை

சரியான முறையில் நிர்ணயம் செய்யமுடியாது. ஆகவே இந்த பிரதி நிதிகளை சர்க்காரே நேரடியாகத் தேர்ந்து எடுக்கவேண்டும். அதோடு உற்பத்தியாளர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளேயும் யார் யாரென்று நிர்ணயம் செய்வது மிகவும் கஷ்டமான காரியம். ஆகவே நோட்டிபைட் செய்யப்பட்டிருக்கும் மார்க்கட்டிங் ஏரியாவில் ஒரு லிஸ்டோ, அஸோஸியேஷன் மூலமாக ஒரு பானலோ தயாரித்து அதிலிருந்து பொறுக்கியெடுக்கவேண்டும். அப்போது உண்மையான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க முடியும். அப்படியிருந்தால்தான் வியாபாரிகளேயும், விற்பனையாளர்களேயும், உற்பத்தியாளர்களேயும் திருப்தி செய்யமுடியும். அதோடு அவர்களுக்கும் தங்களுடைய உண்மையான பிரதிநிதிகளை தேர்ந் தெடுத்திருக்கிறார்கள் என்கின்ற திருப்தி இருக்கும். அதல்லாமல் அக்ரி கல்சரல் டயரக்டர் அவர்களால் ஸ்டேட் பூராவும் இருக்கும் உண்மையான பிரதிநிதிகளை அறிந்துகொள்ள முடியாது. அவர்களால் நிர்ணயம் செய்யப் படுகின்றவர்களும் உண்மையான பிரதிநிதிகளாக இருக்கமாட்டார்கள். இந்த மசோதாவின் முக்கிய நோக்கமே சர்க்காருடைய பொறுப்பை மக்களிடம் விட்டுக்கொடுப்பது என்பதுதான். ஆகவே உற்பத்தியாளர் களுக்கோ அல்லது விற்பனையாளர்களுக்கோ அல்லது வியாபாரிகளுக்கோ பாதகம் ஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கனம் லாஸர் அவர்கள் கூறினது மாதிரி எந்த ஊரை எடுத்துக்கொண்டாலும் உணவுப் பொருட்களாக இருக்கின்ற அரிசி, நெல் முதலிய வியாபாரங்களிலிருந்து ஒரு பகுதியை "மகிமை" என் பதற்கு ஒதுக்கி வைத்து அதைக்கொண்டு பொதுச் செலவுக்கு செலவு செய்து வருவதுண்டு. அம்மாதிரிப்பட்டவைகளுக்கு இதில் நிச்சயமாக விதி விலக்கு கொடுத்துத்தான் ஆகவேண்டும். அவ்விதம் கொடுத்தால் பொது மக்களுடைய நலனுக்கு மிகவும் உதவுவதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதற்கு விதிவிலக்கு கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லைஸன்ஸ் இல்லாமல் ஸ்டோரேஜ் செய்து வைத்திருந் தாலும் அது குற்றமாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே மாதிரி எல்லா இடங்களுக்கும் லைஸன்ஸ் எடுக்க வேண்டும் என்று சொல்லப் பட்டிருந்தும், கோவாப்ரட்டீவ் முறையில் சேமித்து வைத்திருந்தால் லைஸன்ஸ் எடுக்க வேண்டியதில்லை என்று விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன அவசியம் என்று தெரியவில்லை.

அடுத்தபடியாக லைஸன்ஸ் கொடுப்பதில் யாருக்கெல்லாம் மறுக்கலாம் என்பதைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதில் "**who has been convicted of an offence, or been guilty of misconduct, which, in the opinion of the Market Committee, affects the said person's integrity as a man of business.**" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் அவர்களுடைய "கிளாஸிபிக்கேஷனை" சொல்லும்போது "**who has been convicted of an offence, or been guilty of misconduct**" என்று விட்டிருந்தால் போதுமானது. அதோடு "இன்டிகிரட்டி அஸ் எ மான் ஆப் பிஸினெஸ்" (**Integrity as a man of business**) என்று எல்லாம் "க்ளாஸிபிக்கேஷன்" குறிப் பிட வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். இவ்விதம் ஏன் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை.

மேலும் சப்-கிளாஸ் 4-ல்

'(iv) if the Market ComMittee is of the opinion that the grant of the licence in respect of any place situated within a distance of five miles from the notified market area is likely to affect the levy of cess'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நோட்டிபை செய்திருக்கும் ஐந்து மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கும் வியாபாரிகள் அல்லாமல், மார்க்கட்டிங் ஏரியாவினுள் அதாவது மார்க்கட்டிங் ஏரியாவின் ஐந்து மைல்களுக்குள் இருக்கும் வியாபாரிகளுக்கு லைஸன்ஸ் கொடுப்பது மறுக்கப் படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியான முறையில்லை என்று தோன்றுகிறது. இதைப்பற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அக்ரிகல்சரல் (**Producers**) உற்பத்தியாளர்களைப்பற்றி விளக்கம் கொடுத்திருப்பதிலும், விளக்கம் சரியான முறையில் நிர்ண யிக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். இதைப்பற்றியும் அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, மீட்டிங் சம்பந்தமாக சொல்லப்பட்டிருப்பதில், **"The market committee may, at any time, call a general meeting of the market committee and shall call such a meeting within one month after receipt of a requisition in writing from the Director or from such number of members or proportion of the total number of members as may be specified in the by-laws of the market committee.'** என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் மீட்டிங் தாங்கள் நினைத்தபோது கூட்டுவிக்கலாம் என்று இருகிறது. அப்படியில்லாத வகையில் இத்தனை காலத்திற்குள் கூட்ட வேண்டும் என்பதை நிர்ணயித்தால் நன்ருக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அப்பாயின்ட்மென்ட் விஷயத்தில் சொல்லப்பட்டிருப்பதில் **"Appointment and salaries of officers and servants of market committee."** என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறையில் இருந்து கொண்டிருந் தால் பலவிதமான தகராறுகள் ஏற்படலாம். அதோடு கமிட்டி நிர்ண யிக்கின்ற சம்பளம்தான் ஒவ்வொரு இடத்திலும் பலவிதமாகக் கொடுக்க படும். இதை மாற்றி எல்லா இடத்திலும் ஒரே விதமாக சம்பளம் கொடுப்பதற்கு, ஒவ்வொருவருக்கும் இவ்வளவு சம்பளம் என்று நிர்ண யிக்க வேண்டும். அப்படியிருந்தால் எந்த விதமான குழப்பமும் ஏற் படாமல் இருக்கும். ஆகவே ஆபீஸர்களுக்கு, அதே போன்று மற்ற உத்தியோகஸ்தர்களுக்கு இவர்களுக்கு எல்லாம் இன்னின்ன சம்பளம் என்பதை நிர்ணயம் செய்து சொல்லுவதாக இருந்தால் நன்ருக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, "எக்ஸிக்யூஷன் ஆப் காண்ட்ராக்ட்ஸ்" என்பதைப் பற்றி சொல்லியிருப்பதில், செக்ஷன் 14-ல்

"Every contract entered into by the market committee shall be in writing and shall be signed on behalf of a market committee by the chairman and two other members of the market committee.' என்று சொல்லப்பட்டிருக்கிறது. சார்மென்னும் மற்றும் இரண்டு அங்கத்தினர்களும் சேர்ந்து கொண்டு காண்ட்ராக்ட் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருப்பதை மாற்றி காண்ட்ராக்ட் செய்யும் போது கமிட்டியையும் கலந்து காண்ட்ராக்ட் செய்தால் நன்ருக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

அடுத்தபடியாக செஸ் விதிப்பதைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கும்போதும் அதுவும் சரியான முறையில் அமைந்திருக்கவில்லை என்று தோன்றுகிறது. ஆகவே அதையும் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நான் குறிப்பிட்ட குறைகளை எல்லாம் நீக்குவதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவானது, முக்கியமாக விவசாயிகளுக்கும், அதே போன்று வியாபாரிகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் நன்மை செய்யும்பொருட்டு கொண்டு வந்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. முக்கியமாக உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு எல்லாம் நல்ல விலையில் விற்பதற்கு ஏதாவது வழி செய்யவேண்டும் என்கின்ற கருத்து எல்லோருக்கும் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட ஒரு கருத்து, அல்லது நோக்கம் இந்த மசோதாவின் மூலமாக நிறைவேற்றப்படுமா என்பதைப் பார்க்கும்போது சந்தேகிக்கத்தான் வேண்டியிருக்கிறது. எல்லா விவசாய பொருட்களுக்கும் இந்தச் சட்டம் அமுலாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக லைவ்ஸ்டாக்குகளையும் (கால்நடைகளையும்) சேர்க்கப்பட்டிருக்கிறது.

3-30 p.m. முக்கியமாக ஒருவன் இரண்டு ஆட்டை எடுத்துக்கொண்டு போனால் அவனை இது பாதிக்கும். இரண்டொரு கால் நடைகளை எடுத்துக்கொண்டு போனால் பெரிய துன்பத்தை அது கொடுக்கும்படியாக ஏற்படும். விற்பனை வரி காரணமாக சௌக்கிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அநேக இடங்களில். அதைப்பற்றியும் ஸ்ரீ லோகநாதன் சிபாரிசு செய்திருக்கிறார். சாமான்களைக் கொண்டுபோவதை சௌக்கிகள் தடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக துன்பங்கள் ஏற்படலாம். அதன் மூலம் லஞ்சம் அதிகமாகலாம். விவசாயப் பண்டங்கள் ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கு எடுத்துக்கொண்டு போகவேண்டுமானால் லைசென்சு வாங்க வேண்டும் என்று இருக்கிறது. அதற்காக இந்தக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சேல்ஸ் டாக்ஸ் மாதிரி அந்தக் கமிட்டி ஒரு செஸ் விதிக்கலாம். அந்த செஸ் என்ன என்பதை பின்பு நிர்ணயிக்கப்படும் என்று நினைக்கிறேன். "The cess shall be paid by the seller" என்று போடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி பெரிய நிபந்தனைகள் ஏற்படுத்தியதன் காரணமாக தொல்லை கொடுக்குமே தவிர நன்மையைக் கொடுக்காது என்று நினைக்கிறேன்.

தவிர இந்த வண்டிகளில் எந்த விதமான சாமான்கள் கொண்டு போன போதிலும் "to stop the vehicle inspect the records and seize the notified agricultural produce" என்று கண்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது அதிகத் தொல்லைதான் கொடுக்கும். எவ்வளவுக்கு எவ்வளவு தொல்லைகளைக் கொடுக்காமல் சல்லிசாக அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்யவேண்டும். முக்கியமாக விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும் விஷயத்தைப்பற்றியும் இன்னும் கொஞ்சம் கவனிக்கவேண்டும்.. கடன் வசதிகள் எல்லாம் விவசாயிகளுக்கு இருக்கவேண்டும். கனம் சின்னதுரை சொன்னதுபோல், மாமிசம்போல சில வஸ்துக்களை விற்பதற்கு எடுத்துக்கொண்டு போனாலும் அதைத் தடுத்து நிறுத்துவார்கள் என்று சொன்னார். அவைகளையும் இதன் மூலம் தடுத்து அமுலுக்குக் கொண்டு வருவார்கள் என்று நினைக்கிறேன். அம்மாதிரிக்கு இல்லாமல் அவர்களுக்குத் தொல்லையை அதிகப்படுத்தாமல் நல்ல முறையில் இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். இந்த முறையில் நல்ல

விதிகள் ஏற்பட வேண்டும். பொறுக்குக் கமிட்டி இந்த மசோதாவை பூராவும் நல்ல முறையில் பரிசீலனை செய்யும் என்று நம்புகிறேன். அப்படிப் பரிசீலனை செய்து திருத்திய பின்பு இந்தச் சபையின் முன்பு வரப்போகிறது. அப்பொழுது இதற்கு மேல் சொல்ல வேண்டியவைகளை எல்லாம் சொல்லிக் கொள்ளுகிறேன். இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: கனம் சபாநாயகர் அவர்களே, ஏதோ ஸ்டேட் ட்ரேடிங்கை கொண்டு வரவேண்டும் என்ற கருத்தை மனதில் வைத்துக்கொண்டு இதை ஸ்டேட் ட்ரேடிங்குக்கு ஒரு ப்ரலூடாக கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று ஸ்ரீ ஸ்ரீநிவாச அய்யர் சொன்னார். கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்கள் இந்த மசோதா விவசாயிகளுக்கு பெரும் தொல்லையைக் கொடுக்கக்கூடிய மசோதாவாகத் தோன்றுகிறது என்று அவர்களுடைய அச்சத்தை தெரிவித்தார். கடைசியாகப் பேசிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மசோதாவிலுள்ள சில பிரிவுகள் விவசாயிகளுக்கு பாதகத்தை ஏற்படுத்தலாம் என்ற அச்சத்தையும் தெரிவித்தார். ஒன்றை மட்டும் முதலாவதாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இம்மாதிரியான ஒரு சட்டம் புதியதாகக் கொண்டு வரப்படவில்லை என்பது கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். விவசாயிகளுடைய சில விவசாயப் பொருள்களை விற்பதற்கும் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், அவர்களுக்கு வேண்டிய உதவி அளிக்க வேண்டும் என்பதற்காகவும் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பது இன்று அல்ல நேற்று அல்ல 1933-ம் ஆண்டில் அப்பொழுது இருந்த ஆட்சியாளர்கள் இதற்கு என்று ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று முடிவு செய்து ஒரு சட்டத்தை கொண்டு வந்து அதை இந்தச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றினார்கள். ஆனால் இப்பொழுது கமர்சியல் க்ராப்ஸ் அதாவது ரொக்க விளைபொருள்கள் என்று சொல்வார்கள் அம்மாதிரியாக கமிர்ச்சியல் க்ராப்க்கு மாத்திரம் அதிகமான பணத்திற்கு விலைக்கு விற்பதற்கு வசதி இருக்க வேண்டும், விற்பதில் விவசாயிகள் சுரண்டப்படாமல் அவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்ற வகையில் அந்த லட்சியத்துடன் இந்த கமர்சியல் க்ராப்ஸ் மார்க்கெட்டிங் ஆக்ட் அப்பொழுதே கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம் சில ஜில்லாக்களில்தான் அமுலில் இருக்கிறது. சில ஜில்லாக்களில் இல்லை. இந்தச் சட்டத்தை எங்கு கொண்டு வரவேண்டுமென்றாலும் கொண்டு வரலாம் என்று இருக்கிறது. சிற்சில கமர்சியல் க்ராப்சுக்குத்தான் சிற் சில இடங்களுக்குத்தான் சிற்சில மாவட்டங்களுக்குத்தான் இதை அமுலுக்குக் கொண்டு வர முடியும். அப்படியே அமுலுக்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதுதான் முக்கியமான விஷயம். சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள், தென்னாற்காடு மாவட்டத்தில் நிலக்கடலைதான் பெரிய விவசாயப் பொருள், அதை விற்பதற்கு இந்த மார்க்கெட்டிங் கமிட்டி இருக்கிறது, அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இரண்டாவதாக திருப்பூரில் பருத்தி சிறந்த விவசாயப் பொருள் என்று அங்கே அதை விற்பதற்கு மார்க்கெட்டிங் கமிட்டி இருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் விசாரித்துப் பார்த்தால் கனம் அங்கத்தினர்கள் உணறுவார்கள், இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் நடைபெறுவது மிகவும் சாதாகமாக இருக்கிறது, விவசாயிகளும் அதனுடைய அருமையை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்பது தெரியும். இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் நன்றாகவே நடந்து வருகிறது. ரொம்பவும் திருப்திகரமாகவே நடந்து வருகிறது. விவசாயிகளுக்குப் பலன்தரக்கூடிய அளவில் நடந்து கொண்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் நன்கு உணருவார்கள். இப்பொழுது இதைக்கொண்டு வரவேண்டும் என்று சொன்னால் சில இடங்களில் கிளர்ச்சிகள்கூட நடத்தப்படுகிறது. புதியதாக

பொள்ளாச்சியில் நிலக்கடலைக்கு இந்த மார்க்கெட்டிங் ஆக்ட்டை விஸ்தரிக்க வேண்டும் என்று சொன்ன போதும், விருதுநகரிலும், ராமனுதபுரத்திலும் பருத்திக்காக இதை விஸ்தரிக்க வேண்டுமென்ற யோசனை வரும் போதும் எல்லா வியாபாரிகளும் இதை பலமாக எதிர்க்க முற்பட்டார்கள். பல இடங்களில் இந்த வியாபாரம் நடைபெறுவதற்கு குறுக்கே நிற்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இதை எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். தென்னுற்காட்டில் நிலக் கடலைக்கு மார்க்கெட்டிங் கமிட்டி வரவேண்டும் என்று சொன்ன போதும் திருப்பூரில் பருத்திக்கு மார்க்கெட்டிங் கமிட்டி வரவேண்டும் என்று சொன்ன போதும் இம்மாதிரியான பலமான எதிர்ப்பு வியாபாரிகளால் இருந்தது. எப்படி எதிர்த்தார்கள் என்றால் சுப்ரீம் கோர்ட்டு வரையில் போகக்கூடிய அளவில் பலமாக எதிர்த்தார்கள். விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படும் அளவில் எதிர்த்து வந்திருக்கிறார்கள். முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னதாக நிறைவேற்றப்பட்ட சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும் என்று இப்பொழுது ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்றால் விவசாயிகளுக்கு சீராக விலை கிடைக்க வேண்டுமென்று ஒரே நோக்கத்துடன் தான் இதைக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் இதைக் கொண்டு வரப்பட்டிருப்பதால் இதற்கு ஏதாவது விளக்கம் கொடுக்க வேண்டும் என்றால் அதை தாராளமாகக் கொடுக்கலாம். குறைகள் இருந்தால் அதை எடுத்துச்சொல்லலாம். அதை ஏற்றுக் கொள்வதற்கும் தயாராக இருக்கிறோம். விவசாயிகளை பாதிக்கும் அளவில் எந்தப் பிரிவும் இல்லை. இன்னும் சில அங்கத்தினர்கள் குறிப்பிட்ட அபிப்பிராயங்களை வைத்துக்கொண்டு மேலும் பரிசீலனை செய்து இந்த மசோதாவை எந்த அளவுக்கு திருத்தி அமைக்க முடியுமோ அந்த அளவுக்கு திருத்தி அமைக்கவும் தயாராக இருக்கிறோம். பொதுவாக இது ஒரு டேஞ்சரஸ் வெபனாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். டேஞ்ரஸ் வெபன் என்றால் என்ன என்பது புரியவில்லை. இந்தச் சட்டம் 36 ஆண்டுகளாக அமுலில் இருந்துகொண்டிருக்கிறது. என்ன டேஞ்சர் வந்து விட்டது என்பது தெரியவில்லை. வர்த்தகர்களும் வியாபாரிகளும் என்னிடம் வந்து ஏதாவது சலுகை காட்ட வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கெல்லாம் ஒப்புக்கொண்டேன். அதற்குப் பிறகு சரி பார்க்கலாம், ஹைக்கோர்ட்டில் கேஸ் இருக்கிறது, அது முடிந்த பிறகு என்ன தீர்ப்பு கிடைக்கிறது என்று பார்த்துக்கொண்டு அதன் பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம் என்று சொன்னேன். ராஜியாகப் போகலாம் என்று என்னிடம் வந்தார்கள். தீர்ப்பைப் பார்த்துக்கொண்டு அதைப்பற்றி யோசிக்கலாம் என்று சொன்னேன். அதன் பிறகு சட்டம் செய்து ஏதாவது செய்யலாம் என்றும் சொன்னேன். அதனால் டேஞ்சரஸ் வெபன் ஒன்றும் இல்லை. அப்படிச் சொல்வதிலும் நியாயம் இல்லை. இந்த மசோதாவில் பொதுவாக அக்ரிகல்சரல் ப்ராடியூஸ், கமர்சியல் க்ராப்ஸ் என்று இருப்பதற்கு பதிலாக அக்ரிகல்சரல் ப்ராடியூஸ் என்று இருப்பதைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அக்ரிகல்சரல் ப்ராடியூஸ் என்று போட்டு விட்டால் மட்டும் அல்ல விவசாய பொருள்கள், கால்நடை அபிவிருத்திப் பொருள்கள் இவைகள் எல்லாவற்றையும் சேர்த்துதான் இப்பொழுது சட்டமாகக் கொண்டு வரவேண்டுமென்ற அர்த்தம் இதில் இல்லை. ஒரு இடத்திலிருந்து ஆடுகளை விற்பதற்குக் கொண்டு போனாலும் இந்தச் சட்டம் பிரயோகிக்கப்படாது. விற்பதற்கும் வாங்குவதற்கும் பாதகம் விளைவிக்கவேண்டும் என்ற கருத்து இந்த மசோதாவில் இல்லை. கமர்ஷியல் க்ராப்ஸ் என்று போட்டாலும் எல்லாக் கமர்ஷியல் க்ராப்சுக்கும் கொண்டு வரவில்லை. அப்போதைக்கப்போது என்ன விளைபொருள்களைக்கொண்டு வருவது என்பது நோடிபிகேஷன் மூலமாக முடிவு செய்வதாகும். எல்லா இடத்திலும் கொண்டுவருவதில்லை. எல்லாக் கமர்ஷியல் கிராப்சுக்கும் கொண்டு வரவேண்டியதில்லை. சின்னதுரையவர்கள் " கமர்ஷியல் கிராப்

சோடு " நிறுத்திவிட்டால் போதாதா ? " என்று கேட்டார்கள். புகையிலை கமர்ஷியல் கிராப்சில் வருகிறது. அதற்கு அவர்கள் தொகுதியிலிருந்து ஆட்சேபனை வந்திருக்கிறது. கமர்ஷியல் கிராப்ஸில் புகையிலை வருகிறது. பல்லடத்தில் வைத்துக்கொள்ளுவதா ? வேறு இடத்தில் வைத்துக் கொள்ளுவதா ? அப்போதைக்கப்போது பரிசீலனை செய்து அதற்குத் தகுந்தவாறு முடிவு செய்யவேண்டியிருக்கிறது. இப்படியே இருக்கட்டும் என்று சொன்னால் மட்டும் கனம் சின்னதுரையவர்கள் குறிப்பிடும் சில கஷ்டங்கள் தீர்ந்துவிடாது. பொதுவாக விவசாயிகளுக்கு வேண்டிய பொருள்களுக்கு வசதி அளிக்கவேண்டுமென்றால் கமர்ஷியல் கிராப்சாக இருந்தால் போதாது. பொதுவாக எல்லா விவசாயப் பொருள்களுக்கு விஸ்தரிக்கவேண்டுமென்று நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அதையொட்டி இந்த மசோதா வந்திருக்கிறது. உடனடியாக எல்லா இடத்திலும் எல்லா விவசாயப் பொருள்களையும் எடுத்துக்கொள்ளுவது என்பதல்ல. எங்கே விஸ்தரித்தால் பலன் ஏற்படும் என்பதைப் பார்த்துதான் இதை விஸ்தரிக்கவேண்டுமென்ற கருத்திலே தான் இந்த மசோதா ஆக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, இந்த " ஸெஸ் " வசூலிப்பது பற்றிச் சொன்னார்கள். செஸ் வசூலிப்பது பற்றி இந்த மசோதாவில் காணப்படுவது புதிதல்ல. 1938-ம் வருஷத்திய சட்டத்திலேயே இருக்கிறது. ஒரு மார்க்கட்டிங் கமிட்டி நடைபெறவேண்டுமென்றால் செலவுக்கு எங்கே போவது ? இதைக் குறிப்பிடும்போது " எந்தனையோ வரி கொடுக்கிறோம் " என்று சொன்னால் என்ன அர்த்தம் ? அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. புதிதாக விவசாயிகளுக்கு ஒரு வசதி செய்து கொடுக்க விரும்புகிறோம். அது வேண்டாமென்றால் இந்த மசோதா கொண்டுவரவே வேண்டியதில்லை. மசோதாவை வாபஸ் பெற்றுவிடலாம். அரசாங்கத்துக்கு விவசாயிகளைத் துன்புறுத்தவேண்டுமென்ற எண்ணமில்லை. உண்மையிலேயே விவசாயிகளுக்கு இந்த மசோதா எந்தவித பலனையும் அளிக்காது என்று கனம் அங்கத்தினர்கள் அபிப்பிராயப்பட்டால் இந்த மசோதாவை வாபஸ் பெற்றுக் கொள்ள அரசாங்கம் தயார். விவசாயிகளின் நலனை ஒட்டித்தான் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருள்களை குறைந்த விலைக்கு விற்பதற்குப் பதிலாக அதிக விலைக்கு விற்க ஒரு வசதி வேண்டும். அதற்கு ஒரு மார்க்கட்டிங் கமிட்டி, அந்தக் கமிட்டி வேலை செய்வதற்கு ஒரு கட்டிடம், உத்தியோகஸ்தர்கள் வேண்டும் அதற்கு ஆகும் செலவை விவசாயிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஓரளவு லாபம் வரும்போது செலவுக்கும் தயாராக இருக்கவேண்டும். லாபம் வராது என்று சொன்னால் இந்தச் சட்டம் வேண்டாமென்று சொல்லிவிடலாம். அந்த முறையில் இப்பொழுது " செஸ் " விதிக்கப்பட்டு வருகிறது. தென்னாற்காடு மார்க்கட்டிங் கமிட்டி, வட ஆற்காட்டில் திருவண்ணாமலை மார்க்கட்டிங் கமிட்டி, பொள்ளாச்சி மார்க்கட்டிங் கமிட்டி, திருபத்தூர் மார்க்கட்டிங் கமிட்டி ஆகியவைகளில் " செஸ் " வசூலிக்கப்பட்டு வருகிறது. அனாவசியமாக மார்க்கட்டிங் கமிட்டிக்கு நிதி திரட்டுவதற்காக " செஸ் " போடவில்லை. செலவைப் பகிர்ந்து கொள்வது என்ற முறையில் " செஸ் " விதிக்கப்பட்டிருக்கிறது. " மகமை " என்று வசூலிப்பதை எடுத்துவிடுகிறார்கள் என்று லாசர் அவர்கள் சொன்னார்கள். இந்த மகிமை வசூலிப்பதைத் தடுக்கத்தான் இந்த மார்க்கட்டிங் ஆக்ட் கொண்டுவரப்படுவதன் நோக்கம். வியாபாரிகளிடம் விவசாயிகள் போய் தங்களுடைய பொருளை விற்றால் அதற்குப் பில் போடும் போது கழித்து விடுகிறார்கள். அதுதான் மகிமை. அந்த கிராமத்தில் மட்டும் " மகமை " அல்ல. வேறொரு கிராமத்தில் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அந்தக் கிராமத்தைச் சேராதவனிடமிருந்தும் மகிமை வசூலிக்கப்படும். இது சரியல்ல. இது போடக்கூடாது. " செஸ் " போட்டால் மார்க்கட்டிங் கமிட்டிக்கும்

பயன்படுகிறது. விவசாயிகளுக்கும் பயன் அளிக்கிறது. அதற்காகத்தான் "செஸ்" போடுகிறோம். இந்த மாதிரி "மகமை" போடுவது தவறு. நிர்ப்பந்தமாகப் போடுவது தவறு. அந்த தர்மத்தினால் பலன் அடைபவர்கள் கொடுப்பதில் ஆட்சேபனையில்லை. அதற்குச் சம்பந்தம் இல்லாதவர்களுக்குக் கூட "மகிமை" விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வர வேண்டிய பணத்தில் இருந்து கழித்து கொள்ளப்படுகிறது. ஆகவே, அது கூடாது என்று சொல்லப்படுகிறது. விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுக்க வேண்டுமென்று கனம் கே. ஆர். விஸ்வநாதன் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது மார்க்கட்டிங் கமிட்டி போடுவதால் விலை அதிகமாகக் கிடைக்காமல் போய்விடுமோ? வியாபாரிகள் வராமல் போய்விடுவார்களோ என்று எண்ணவேண்டியதில்லை. இந்த மாதிரி மார்க்கட்டிங் கமிட்டி ஏற்படுத்தாமல் இருந்தால் வியாபாரிகள் கட்டுப்பாடாக இருந்து குறைந்த விலைக்கு விவசாயிகளிடம் இருந்து வாங்கிக்கொள்ளுவார்கள். இந்த மார்க்கட்டிங் சொஸைடி ஏற்படுத்துவதன் மூலம் அதைத் தவிர்க்கச் செய்கிறோம். இதனால் பாதகம் ஏற்படுமென்றால் கவனிக்கவேண்டியது அவசியந்தான். நல்ல, முறையில் விவசாயிக்கும் நஷ்டம் ஏற்படும் வகையில் குறைந்த விலைக்கு விற்கப்படக்கூடாது. அதேசமயத்தில் வியாபாரியும் அதிக விலை கொடுத்து வாங்கும் நிலைமை ஏற்படக்கூடாது என்பதுதான் நோக்கம். பொறுக்குக் கமிட்டியில் பரிசீலனை செய்யும்போது என்ன வழி வகைகளைச் செய்யலாம் என்று கவனம் செலுத்தலாம்.

மற்றொன்று கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். கூட்டுறவு இயகத்தில். நல்ல அநுபவம் உள்ள சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் சொன்னார்கள், மார்க்கட்டிங் சொஸைடி எவ்வாறு விவசாயிகளுக்கு நிரந்தரமாக இருக்கிற கூட்டுறவு இயக்கத்தைப் போல பலன் அளிக்கக் கூடியதாக இருக்கும் என்று. இரண்டும் சேர்ந்து நல்ல முறையில் விவசாயிகளுக்குப் பெரிதும் பலன் அளிக்கின்ற வகையில் அவ்வாறு பரிபூர்ணமான பலன் ஏற்படுத்துகின்ற வகையில் இருக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். ஆனால் மார்க்கெட்டிங் சொஸைடி இருக்கிறதென்றால்—மார்க்கெட்டிங் சொஸைடி விவசாயிகளுடைய நலனைப் பாதுகாப்பதற்காகத்தான் இருக்கிறது. அங்கங்கே விவசாயிகள் எல்லோருமாகச் சேர்ந்துதான் மார்க்கெட்டிங் சொஸைடி வைத்துக் கொள்ளவேண்டும். மற்றவர்கள் கூட்டுறவு சொஸைடி வைத்துக்கொண்டாலும்கூட விவசாயிகள் பாதிக்கப்படுவதற்கு இல்லை. வியாபாரிகள் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு கூட்டுறவு சங்கம் வைத்துக் கொண்டாலும்கூட அதுவும் பரிபூர்ணமான பலனைத் தரும். ஆனால் அந்த அளவுக்கு மார்க்கெட்டிங் சொஸைடி அமைய வேண்டும். இப்போது இருக்கிற நிலையை வைத்துக்கொண்டுதான் இந்தச் சட்டத்தைச் செய்திருக்கிறோம். இதற்கு முன் இருந்த சட்டத்தைத் திருத்தியிருக்கிறோம். ஆகவே தான் இப்போது வியாபாரிகள் இருக்கிறார்கள். வியாபாரிகளைப் புறக்கணிக்கும் நோக்கம் இந்தச் சட்டத்தில் இல்லை. வியாபாரிகளின் இஷ்டப்படி எல்லாம் வியாபாரம் செய்வதற்கு இடம் கொடுக்கக்கூடாது. விவசாயிகளுக்கும் நியாயமான விலை கிடைக்க வேண்டும். வியாபாரிகள் விவசாயிகளைச் சுரண்டாமல் இருக்கும் படியாகவும் பார்த்துக்கொள்ளவேண்டும். இப்படிப் பல நோக்கங்களைக் கொண்டு இந்தச் சட்டம் வந்திருக்கிறது. கூட்டுறவு சங்கத்திற்கும் இதில் விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஏன் விதிவிலக்குக் கொடுக்கவேண்டும் என்றும்கூட கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். கூட்டுறவு சங்கத்தைப் பொறுத்தவரையிலும் எந்த நிபந்தனையும் வேண்டாம் என்ற முறையில் விலக்கு அளிக்கப்படுகிறது. இப்போது இருக்கிற நிலைமையில் கூட்டுறவு சங்கங்களை—விவசாயிகளும், உற்பத்தியாளர்களும், வியாபாரிகளுமே தான் அமைத்துக் கொள்கிறார்கள். அதில் போய் தலையிடுவதனால் இந்தச் சட்டத்திற்குப் பயன் இல்லை.

மேலும் இந்தச் சட்டத்தில் சில சிக்கல்கள் இருக்கலாம். நல்ல அநுபவம் உடைய சுப்பிரமணிய கவுண்டர் அவர்களும் பொறுக்குக் கமிட்டியில் இருக்கிறார்கள். கூட்டுறவு சங்கத்தையும், மார்க்கெட்டிங் சொஸைடியையும், எவ்வாறு இணைத்து ஒருமுகமாக வேலை செய்ய முடியும் என்பதைப் பரிசீலனை செய்யலாம். அதற்குத் தக்க வகையில் நல்ல மாறுதல் செய்யவேண்டும் என்றாலும் செய்யலாம். கூட்டுறவு சங்கங்கள் நடக்கிற இடத்தில் மார்க்கெட்டிங் கமிட்டி நடப்பது இல்லை. மார்க்கெட்டிங் கமிட்டி இருக்கக்கூடிய இடங்களில் கூட்டுறவு சங்கங்களுக்கும் இடம் இல்லையென்று சொன்னார்கள். கூட்டுறவு சங்கங்கள் இல்லாத இடத்தில் மார்க்கெட்டிங் கமிட்டியை நல்லமுறையில் நடத்தவேண்டும் என்பதுதான் நமது நோக்கம்.

அதோடு இன்னொன்று. இந்தக் கமிட்டிக்கு நியமனம் செய்வதா ? அல்லது தேர்தல் நடத்துவதா என்பது. முன்பு தேர்தல் தான் இருந்தது. ஆனால் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு, லட்சியத்தோடு இந்தக் கமிட்டிகள் அமைக்கப்படுகிறது. ஆகவே இந்த நோக்கத்தை, லட்சியத்தை ஈடேற்ற வேண்டுமென்றால் தேர்தல் மூலமாக வருகிறவர்களைக்கொண்டு செய்வது கஷ்டம். முன்பு இருந்த முறையில் பல கஷ்டங்கள் ஏற்பட்டதன் காரணமாகத்தான் அவர்களும் இதை நியமனமாகச் செய்து விடலாம் என்று சிபார்சு செய்தார்கள். மேலும் பொறுக்குக் கமிட்டியில் தேர்தல் முறையில்தான் இருக்கவேண்டும் என்று கருதப்பட்டால் அப்படியும் செய்யலாம். நியமனம் செய்வது என்றால் டைரெக்டருக்கே அதிகாரம் கொடுத்துவிடக்கூடாது என்றார்கள். அது வாஸ்தவம். அவர்கள் இப்போது ஒரு பானல் ஆப் மெம்பர்ஸ்தான் அனுப்புவார்கள். சர்க்கார் யார் யார் அதில் இருக்கிறார்கள் என்பதைப் பரிசீலனை செய்து பார்த்து பின்னர் அந்த பானலில் இருந்து தக்கவர்களைத் தான் நியமிப்பார்கள். அந்த அதிகாரம் இல்லாத டைரெக்டருக்கே கொடுத்து விடுவது என்றால் கனம் அங்கத்தினர்கள் சொல்வது போல அதில் பிரயோஜனமில்லை. ஆகவே மொத்தத்தில் இந்தச் சட்டம் விவசாயிகளுடைய நலனுக்காகக் கொண்டுவரப்பட்டது. விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை நியாயமான விலைக்கு விற்க வழிவகை செய்யவேண்டும். அவர்கள் சுரண்டப்பட அனுமதிக்கக் கூடாது என்கிற நோக்கத்துடன் தான் இது கொண்டுவரப்படுகிறது. இதில் இருக்கிற குறைகளை செலெக்ட் கமிட்டியில் நன்றாகப் பரிசீலனை செய்து கவனித்து இதை எந்த அளவு திருத்தவேண்டும் என்பதைப் பின்னர் யோசித்துக் கொள்ளலாம். அந்த நம்பிக்கையுடன்தான் என்னுடைய பிரேரணையை கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 members (16 members of the Legislative Assembly and 8 members of the Legislative Council) to consider the Madras Agricultural Produce Markets Bill, 1959, and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri M. Bhaktavatsalam.
Sri K. S. Subramania Gounder.
,, T. M. Nallaswami.

Sri R. Krishnasami Gopalar.
,, M. Alagirisamy.
,, P. G. Manickam.
,, K. Periannan.
,, P. M. Munusami Gounder.
,, M. Kandasami Padayachi.
,, K. Padiyaraj.
,, A. R. Marimuthu.
,, M. Kalyanasundaram.
,, K. Sattanatha Karayalar.
,, P. K. Mookiah Thevar.
,, T. V. Thiruvenkadasami Naicker.
,, A. V. P. Asaithambi.

The motion was put and carried.

(2) THE MADRAS KHADI AND VILLAGE INDUSTRIES BOARD BILL, 1959.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg leave to introduce "the Madras Khadi and Village Industries Board Bill" 1959, and move—

That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 members (16 members of the Legislative Assembly and 8 members of the Legislative Council) to consider the Madras Khadi and Village Industries Board Bill, 1959, and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri M. Bhaktavatsalam.
Sri T. K. Subbiah.
,, A. Vedarathnam.
Srimathi Kamalambuja Ammal.
,, P. K. R. Lakshmikantham.
Sri S. C. Sadayappa Mudaliar.
,, M. P. Periasami.
,, R. Chidambara Bharathi.
,, G. Narayanaswami Naidu.
,, R. Swaminatha Merkondar.

a Published in the *Fort St. George Gazette* extraordinary dated as 8th April 1959.

30th April 1959] [Sri M. Bhaktavatsalam]

Sri K. Gopala Kounder.
,, P. S. Ellappan.
,, K. R. Nallasivam.
,, N. Marudachalam.
,, A. Govindasamy.
,, T. S. Ramaswamy Pillai.

Sir, I shall now briefly explain the circumstances leading to this piece of legislation. For the development of Khadi and Village Industries, the Planning Commission recommended to the Central Government that a Khadi and Village Industries Development Board might be set up for the preparation and execution of programmes of Khadi and Village Industries. The Board was intended to be an organisation outside the departmental machinery of the Government and was to be composed of experienced workers in the field of Khadi and Village Industries and of representatives of the Central Government. In pursuance of this recommendation, the Central Government set up the All-India Khadi and Village Industries Board for the preparation and execution of programmes of the Khadi and Village Industries. The Planning Commission further recommended that similar organisation should be set up in the States which should work in collaboration with the Central Board. The State Government accordingly set up in 1953, a Khadi and Village Industries Board as an advisory body, which also recommended in 1954 that it might be made a statutory body on the lines of the Bombay State Board. Subsequently, the first All-India Khadi and Gramodyog Conference convened by the All-India Khadi and Village Industries Board held in November 1954 recommended among other things, that in order that the work of the State Board in the field of Khadi and Village Industries might be effective, they should be vested with statutory powers.

It may be stated in this connection that the Central Government enacted the Khadi and Village Industries Commission Act in 1956 for setting up a statutory commission called the All-India Khadi and Village Industries Commission, so that the procedural and financial difficulties which hampered the work of the All-India Board might be removed. The present State Khadi and Village Industries Board might be removed. The present State Khadi and Village 'Industries Board being an advisory body is also faced with similar difficulties in the preparation and execution of programmes of Khadi and Village Industries. Many formalities have to be gone through before the scheme approved by it are implemented and this involves a certain amount of delay. Further, the non-statutory nature of the existing State Board prevents it from receiving funds from the All-India Khadi and Village Industries Commission or from other agencies. The

conversion of the existing State Board—which is an advisory Board—into a Statutory Board will create an effective machinery for carrying out quickly schemes for the development of Khadi and Village Industries in the State.

The All-India Khadi and Village Industries Commission which is vested with necessary powers for proper development of Khadi and Village Industries is assisted by an advisory body, viz., All-India Khadi and Village Industries Board. As the programme of above central organisations is intended to be carried out in this State through registered institutions, co-operative societies, and representatives in the States, the existence of statutory bodies similar in nature and consistent to the Central Organisation is considered necessary to facilitate the work of the Central Organisation. Most of the States have already set up statutory Khadi and Village Industries Boards in their States. It is therefore considered necessary, that a similar Board should be constituted in this State also.

I shall now briefly explain the provisions of the Bill. Clause 3 of the Bill deals with the establishment and constitution of the Board. The members will be appointed by the Government. The Minister in charge of Khadi Department will be the President of the Board and the Vice-President will be elected from amongst the non-official members. The Secretary will be appointed by the Government in consultation with the Board, either from amongst its members or any one else. The majority of the members will be non-officials and only such non-officials as have shown active interest in the production and development of khadi and village industries will be appointed. Clauses 4 to 9 deal with matters regarding the resignation of members, non-invalidation of the acts and proceedings due to vacancies of the members, etc., temporary association of persons with the Board for particular purposes, meetings of the Board, term of office of the President, Secretary and other members, powers of the Secretary, appointment of staff, etc. Clause 10 deals with the constitution of the Standing Finance Committee of the Board with the Vice-President as the Chairman. Clauses 11 and 12 deal with the functions and the powers of the Board. The Statutory Board will plan, organise and implement programmes for the development of khadi and village industries in the State. It will also have power to provide deserving persons with gainful employment through the organisation of khadi and village industries and also to grant loans and give other assistance for the development of khadi and village industries and to organise co-operative societies for khadi and village industries, etc. The Board will also conduct training centres and train persons at such centres or at other centres even outside

the State of Madras in Khadi and Village Industries. Clause 13 empowers the Government to give directions to the Board. Clauses 14 to 24 deal with the matters relating to the finance, accounts, audit and preparation of budget and other reports of the Board. Clause 25 empowers the Government to dissolve the Board under the circumstances mentioned therein and also the procedure to be followed before and after dissolving it. Clause 26 relates to the preparation and submission of annual programmes and establishment schedules. Clause 27 provides that the members, officers and other servants of the Board shall be deemed to be public servants within the meaning of section 21 of the Indian Penal Code, 1860. Clause 28 grants legal protection for the President, Vice-President, Secretary, other members and staff of the Board for acts done in good faith in pursuance of this Act. Clause 29 empowers Government to make rules to carry out the purposes of the Act. Clause 30 empowers the Statutory Board to frame regulations, with the previous sanction of Government.

The Bill will involve expenditure from the Consolidated Fund of the State. It is not possible to state at the present juncture the probable commitment in this regard. As the entire expenditure on staff, etc., on Khadi and Village Industries administered by the Government will continue to be administered under their respective Budget heads, the extra commitment towards salary, allowance, etc., under the Board will not be much as the Board will have to maintain the very minimum staff to start with.

Sir, I have now briefly indicated the main objects and features of the Bill. I hope the conversion of the present State Board into a statutory body will certainly create an effective machinery for carrying out quickly the schemes for the development of Khadi and Village Industries in this State. I now commend the motion for the acceptance of the House.

MR. SPEAKER : Motion moved—

That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 members (16 members of the Legislative Assembly and 8 members of the Legislative Council) to consider the Madras Khadi and Village Industries Board Bill, 1959, and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :— 4-00 p.m.

The Hon. Sri M. Bhaktavatsalam.

Sri T. K. Subbiah.

,, A. Vedarathnam.

Srimathi Kamalambuja Ammal.

Srimathi P. K. R. Lakshmikantham.
Sri S. C. Sadayappa Mudaliar.
,, M. P. Periasami.
,, R. Chidambara Bharathi.
,, G. Narayanaswami Naidu.
,, R. Swaminatha Merkondar.
,, K. Gopala Kounder
,, P. S. Ellappan.
,, K. R. Nallasivam.
,, N. Marudachalam
,, A. Govindasamy.
,, T. S. Ramaswamy Pillai.

The motion is before the House for discussion.

Sri P. S. Chinnadurai : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கதர், கிராமக் கைத்தொழில்களுக்கான ஒரு போர்ட் ஏற்கனவே நமது ராஜ்யத்தில் இருக்கிறது. அந்தப் போர்ட் வெறும் ஆலோசனை தரக்கூடிய நிலையில் இருப்பதை மாற்றி அதை சட்டபூர்வ மான முறையில் அமைப்பது மிகவும் வரவேற்கத்தக்கதுதான். அந்த முறையில் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். என்றாலும் சென்ற இரண்டு ஆண்டு காலமாக நமது ராஜ்யத்தில் கதர் கிராமக் கைத் தொழில்களுக்காக எந்தளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டதோ அந்த நிதி முழு வதையும் இந்த ராஜ்ய அரசாங்கத்தால் செலவழிக்க முடியவில்லை. செலவழிப்பது என்றால் முறையானபடி செலவழிப்பதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். கதர் திட்டத்தை எடுத்துக்கொண்டால், இன்று அகில பாரத சர்வசேவா சங்கம் கதர் திட்டத்தை ஏற்று திறமையாக பல வருடங் களாக நடத்திவருகிறது. அதே தொழிலை நமது ராஜ்ய சர்க்காரும் ஏற்று நடத்தவேண்டுமா என்பதைக் குறித்து நாம் சற்று ஆலோசிக்க வேண்டும். அப்படி போட்டி போடக்கூடிய தொழிலாக கதர் தொழில் அமைந்திருக்கிறதா என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவே இரண்டுதடவை இந்த மன்றத்தில் பட்ஜெட் விவாதத்தில் பேசும்போது நான் விளக்கமாக குறிப்பிட்டிருக்கிறேன். கதரில் நம்பிக்கையில்லாத அதிகாரிகளை வைத்துக்கொண்டு கதர் தொழிலை இந்த ராஜ்ய சர்க்கார் நடத்துவதைவிட கதர் தொழிலில் பற்றுதலும், அதில் ஒரு விஸ்வாசத்தோடு, நம்பிக்கையோடு பல ஆண்டு காலமாக பணியாற்றி வருகிற அகில பாரத சர்வசேவா சங்கத்தினிடம் அந்தத் தொழிலை ஒப்படைத்து விட்டால் அதற்குரிய மான்யத் தொகையை ஒவ் வொரு ஆண்டிலும் நாம் இந்த போர்டிற்கு எவ்வளவு கொடுக்கிறோமோ அதே தொகையை நாம் இந்த அகில பாரத சர்வ சேவா சங்கத்திற்கு ஒதுக்கிக் கொடுத்தால் சர்க்கார் கதர் தொழிலை எவ்வளவு திறம்பட நடத்துகிறார்களோ அதை விட திறம்படவும், மக்களுக்கு பலன் தரத்தக்க முறையிலும், இந்தத் தொழிலிற்கே மேன்மை தரத்தக்க விதத்தில் அவர்கள் அதை நடத்துவார்கள் என்று நான் முன்னமேயே கூறியிருக்கிறேன். அதை யேதான் இந்த மசோதா கொண்டு வரக்கூடிய இந்த நேரத்திலும் வலி யுறுத்திக்கூற விரும்புகிறேன். இப்பொழுது இந்த மசோதாவை நிறை வேற்றுகிறபோது கதர் கிராமக் கைத்தொழில் போர்ட் அமைப்பதற்குப்

30th April 1959] [Sri P. S. Chinnadurai]

பதிலாக சென்னை ராஜ்ய கிராமக் கைத்தொழில் போர்ட் அமைப்பதற்குரிய
மசோதாவாக இதைப் பிரகடனப்படுத்துவது சரியாக இருக்குமென்று நான்
கருதுகிறேன். இது அதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். சாதாரண
காலத்தில் கதர் தொழிலை நம்மிடம் இருந்து பிரித்து விட ராஜ்ய சர்க்கார்
சற்று தயக்கம் காட்டினாலும் இந்த மசோதா வரும்போது கதர் தொழிலை
பிரித்தெடுத்து அகிலபாரத சர்வசேவா சங்கத்தினிடம் இதை ஒப்படைப்பது
தான் மேன்மையாகும். சென்ற இரண்டு வருட காலமாக நாம் என்ன
கண்டோம். எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டதோ அதை விட ஒரு கோடி
ரூபாய் குறைவாகத்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில்
ஒதுக்கப்பட்ட தொகையைவிட $1\frac{1}{4}$ கோடி ரூபாய் செலவழிக்க முடியாமல்
வைத்திருந்தார்கள். கிராமக் கைத்தொழில்கள் நன்கு பிரபல்யம் அடைய
வேண்டும். அவை விஸ்தாரமாக பரவி வளம் பெறவேண்டும் என்பதில்
எல்லோருக்கும் அக்கரையுண்டு. ராஜ்ய அரசாங்கத்திற்கும் அதில் அக்கரை
யுண்டு என்று நான் நினைக்கிறேன். அப்படியிருக்கும்போது, ஒதுக்
கப்பட்ட தொகையை என் செலவழிக்க முடியவில்லை என்றால் போதிய
அளவில் தகுந்த நிர்மாண ஊழியர்கள் அரசாங்கத்தினிடம் இல்லை
என்பதினால்தான். தங்கள் வேலையைப்பற்றி, தங்கள் பதவி உயர்வு
போன்ற விஷயங்களை மனதில் நினைத்துக்கொண்டு, அதையே தொழிலாக
நினைத்துக்கொண்டிருப்பவர்கள் அதிகாரிகளாக இருப்பார்களேயானால் அத
னால் கதர், கிராமக் கைத்தொழில்களை வளர்த்து விடமுடியும் என்ற
நம்பிக்கை எனக்கில்லை. அந்தத் தொழில் வளர்ந்து, கிராம மக்கள்
அதன் உண்மையான பலனை அடைய வேண்டுமென்றும் அதற்காக
உழைக்க வேண்டுமென்ற மனப்பான்மை, உண்மையான சுதேச உணர்ச்சி
யாருக்கு இருக்கிறதோ, அந்த சாதாரண எளிய மனம் படைத்த நிர்
மாண ஊழியர்களால்தான் அதை திறம்பட நடத்திவைக்க முடியும்.
அப்படிப்பட்ட நிர்மாண ஊழியர்கள் இன்றையதினம் நமது ராஜ்ய அர
சாங்கத்தின் சர்விஸில் அதிகம் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன்.
கதர் தொழில் சம்பந்தப்பட்டவரையில் எந்த வேலைக்கு ஆள் எடுப்பதாக
யிருந்தாலும் சரி கூடுமானவரையில் அவர்களின் படிப்பு என்னவென்று
பார்க்கிறார்கள். பீ.ஏ. படித்திருக்கிறாரா, எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்தி
திருக்கிறாரா, வேறு டிக்ரி இருக்கிறதா என்பதில்தான் அதிகம் அக்கரை
காட்டப்படுகிறது. டிக்ரீ படிப்பு இல்லாத, சாதாரண நிர்மாண ஊழியர்
களைக்கொண்டு அந்தக் காலத்தில் காந்திஜி அவர்கள் மிகவும் திறம்பட
பல்வேறு விதமான கிராமக் கைத்தொழில்களை அவர் தானாகவே நின்று,
ஒரு ஸ்தாபனமாக நின்று அது வளர்வதற்கு உதவினார்கள் என்பதை நாம்
இந்த நேரத்தில் நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். தியாகிகளுக்கும்,
அவர்கள் குடும்பத்தினருக்கும் மேற்பார்வை பார்க்கும் அதிகாரிகளாக
வேலை பெற ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று
அரசாங்கம் திருப்தியடையலாம். ஆனால் போதுமான அளவில் அது செய்
யப்படவில்லை என்று நான் கருதுகிறேன். தியாக உள்ளம் படைத்தவர்.
கள், சேவா மனப்பான்மை படைத்தவர்கள் பழைய தியாகிகளிலும், அவர்
கள் குடும்பத்திலும் மட்டுமல்ல, இப்பொழுதும் இருக்கிறார்கள். இந்தத்
தலைமுறையிலும் இருக்கிறார்கள். நாட்டுப் பற்றுள்ளவர்கள் இப்பொழு
தும் இருக்கிறார்கள். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால்
அப்படி நாட்டுப் பற்றுள்ளவர்களை, சேவா மனப்பான்மை படைத்தவர்
களை இந்த கதர், கிராமக் கைத்தொழில்கள் சர்வீஸில் போட்டால் நாம்
அதற்கு ஒதுக்கும் பணம் முழுவதும் செலவழிக்கப்படும், அதில் எந்த
விதமான தங்கு தடையும் இருக்க முடியாது. இந்த மசோதாவை
வரவேற்கும் அதே நேரத்தில் கதர் தொழிலை நமது ராஜ்ய சர்க்கார்
பிரித்து எடுத்து சர்வசேவா சங்கத்தினிடம் ஒப்படைக்கவேண்டுமென்று
வலியுறுத்திக் கூறுவதோடு கிராமக் கைத்தொழில்கள் பல்கிப் பெருகு
வதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்

கிறேன். குறிப்பாக, இப்பொழுது 16 கதிர் கொண்ட சர்க்காக்களை பரவலாக பல கிராமங்களிலும் நாம் பரப்புவதற்கு முடியும். விவசாயி களுக்கு அது பெரும் அளவு துணை புரியும் என்று நான் இந்த மன்றத் தின் முன்னால் பன்முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். இப்பொழுதும் கூட அது பரீட்சார்த்தமாக கையாளப்படுகிறது. இரண்டு ஆண்டுகளாக அதை பரீட்சை செய்து கொண்டிருக்கிறோம். அப்படி இனியும் அது பரீட்சார்த்தமாக இருந்துவிட்டால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைகிறபோதுகூட அந்தத் திட்டம் பரீட்சார்த்த திட்டமாகவே போய் விடக்கூடுமென்று நான் அஞ்சுகிறேன். ஆகவே பல்லடம், தாராபுரம், உடுமலைப்பேட்டை போன்ற பகுதிகளை எடுத்துக்கொண்டு அங்கு அரசாங்க உதவி கொடுக்கப்படுமானால், சாதாரண அளவிற்கு இருந்தாலும்கூட அது வெற்றிகரமானதாக இருக்கும். அதை நடத்தி வைக்க நான் என்னால் ஆன ஒத்துழைப்பைக் கொடுக்க முடியும். நான் மட்டுமின்றி என்னைப் போன்ற ஊழியர்கள் பலர் இதில் ஒத்துழைப்பார்கள் என்று நான் கூற விரும்புகிறேன். ஆக, இந்த ஒத்துழைப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒத்துழைப்பு வேண்டுமென்று அரசாங்கம் கேட் கிறது. எதிர்கட்சியினர் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதில்லை என்று இந்த மன்றத்திலும், வெளியிலும் சொல்கிறார்கள். ஆகவே, நாங்கள் ஒத்துழைப்பு கொடுக்கத்தயார், அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், அந்த ஒத்துழைப்பை அரசாங்கம் நிராகரிக்கக் கூடாது என்று நான் இந்த ராஜ்ய அரசாங்கத்தை மீண்டும் வேண்டிக்கொள்கிறேன்.

* **Sri M. S. SELVARAJAN** : கனம் சபாநாயகர் அவர்களே, பிரஸ்தாப மசோதா மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இந்தத் தேசம் பெரும் திரளான ஜனத்தொகையைக் கொண்டது. உலகிலேயே குறிப்பிடத் தக்க அளவிற்கு அதிகம் ஏழைகளையும், அதிகம் கிராமங்களையும் கொண்ட ஒரு தேசம் இது. இந்த தேசத்தின் பசியைப் போக்குவதற்கு, இன்று நாகரீக உலகில் நடமாடுகிற இயந்திரத் தொழில்களால் மட்டும் இந்த நாட்டின் பசியை போக்கி விட முடியும் என்று யாரும் சொல்ல முடியாது. அந்நிலையில் இந்த நாட்டிற்கு தனியாக வழிகள் வகுத்துத்தான் ஆக வேண்டுமென்று நல்லெண்ணம் கொண்டுதான் இந்த தேச அரசாங்கம் நாட்டில் ஏற்படக்கூடிய தொழில் வளர்ச்சியை மூன்று விதமாக பிரித்து பெரிய தொழில்கள், மத்தியதர தொழில்கள், குடிசைகளில் இருக்கக் கூடிய சிறு தொழில்கள் என்று பாகுபடுத்தி அதற்கு தகுந்த அளவிற்கு முக்கியத்துவம் காட்டி வருவது பாராட்டுதற்குரிய ஒரு அம்சமாகும். கிரா மங்களில் இருக்கக்கூடிய ஏழை மக்கள், பெண்கள், வயோதிகர்கள், கன்னிப் பெண்கள் உட்பட வீட்டில் இருந்து கொண்டே மரியாதையுடன், தனக்குத் தெரிந்த தொழிலை தனக்கு உற்ற காலத்தில் உரிய இடத்தி லிருந்து கொண்டு செய்து ஜீவிப்பதற்கு வழி வகுத்துக் கொடுக்கக் கூடியதுதான் இந்தக் கிராமாந்திரத் தொழில்கள். அந்நிலையில் கிராமக் கைத்தொழில்களுக்கும், கதர் தொழிலிற்கும் இந்த ராஜ்ய அரசாங்கம் உரிய முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இந்த ராஜ்யத்தில் தொழிலுக்காக செலவு செய்யக்கூடிய தொகையில் ஏறத்தாழ 50 சதவிகிதம், பாதி அளவு கதருக்காக செலவு செய்வது என்று திட்டம் இருக்கிறது என்று சொன்னால், இந்த ராஜ்ய அளவிலே இருக்கக்கூடிய 3 கோடி மக்களில் ஏறத்தாழ 28,000,000 ஏழை மக்களை மனதில் நினைத்துத்தான் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். படித்தவர்களாக இருந்தாலும் சரி, படிப்பு இல்லாதவர்களாக இருந்தாலும் சரி, கதர் இலாகாவில் உத்தியோகத் திற்கு வரக்கூடியவர்கள், படித்து வேறு வேலையில் அமர்வதற்கு இருந்த வாய்ப்பை விட்டு கதர்த் தொழிலுக்கு வந்தவர்கள், கதர் இலாகா தற்காலிகமான இலாகாவாக இருக்கலாம், நிரந்தரமாக அமைக்கப்படாத

30th April 1959] [Sri M. S. Selvarajan]

ஒரு இலாகாவாக இருக்கலாம் என்றுகூட தயங்கியது உண்டு. இன்றைய தினம் நமது ராஜ்யத்தில் கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதா, மத்திய அரசாங்கம் நிறைவேற்றியிருக்கக்கூடிய சட்டம், இந்த சட்டங்களெல்லாம், கதர்த் தொழிலினுடைய, கிராமத் தொழிலினுடைய முக்கியத்துவத்தை ராஜ்யத்திலும், தேசத்திலும், உலகத்திலும் பறைசாற்றுவதற்காக இயற்றப்படுகின்றன. கதர்த் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், கதர் இலாகாவில் பணியாற்றுகிறவர்களுக்கும்கூட அவரவர்கள் உத்தியோகங்களுக்கு உறுதி அளிப்பதுதான் தங்களுடைய நோக்கம் என்பதை இந்த மசோதாவில் அரசாங்கம் வெளிப்படையாக காட்டியிருப்பதாக நான் கருதுகிறேன். அதுதான் தங்களுடைய லட்சியம் என்பதை சர்க்கார் அறிவித்திருக்கிறார்கள். இப்பொழுது கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவில் இருக்கும் சட்ட நுணுக்கங்களையெல்லாம் இதைப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கும் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டுவிட்டால் மிகவும் சௌகரியமாக இருக்கும்.

அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் பொறுப்பில் ஏன் கதர் உற்பத்தி, விநியோகம் ஆகிய விஷயங்களை விட்டுவிடக்கூடாது என்று எதிர்க்கட்சி நண்பர் ஒருவர் பேசும்பொழுது கேட்டார்கள். இந்த ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் ஏறக்குறைய 50 லட்சம் ரூபாய்க்கு வருஷம் ஒன்றுக்கு அகில பாரத சர்வ சேவா சங்கம் மூலம் விற்பனை செய்ய முடிந்தது. இந்த ராஜ்ய அளவிலே கதர் விற்பனையை மேற்கொண்ட பிற்பாடு, ராஜ்ய அளவில் கதர் இலாகா ஆரம்பிக்கப்பட்ட பிற்பாடு மேலும் 60 லட்சம் ரூபாய்க்கு, முன்பு இருந்ததை விட இரட்டிப்பு மடங்கு விற்பனை செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், கதர் அணியக் கூடியவர்களின் தொகை அதிகப்பட்டிருக்கிறது, வாங்கி உபயோகிப்பவர்களின் தொகை அதிகரித்திருக்கிறது, அளவிலும்கூட கதர் துணி அதிகமாக விற்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். காதி இலாகாவுக்கு இருக்கக்கூடிய வாய்ப்பும் அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய ஏராளமான வாய்ப்பும் அகில பாரத சர்வ சேவா சங்கத்திற்கு சட்ட ரீதியாக கொடுத்துவிடமுடியாது. அது ஒரு புனிதமான இடம். தானாகவே நூல் நூற்று கதர் அணியக்கூடியவர்கள் இருக்கும் புனிதமான இடம் அது. தானாகவே நூற்று, நெய்து, வாடிக்கையாகவே அந்தக் கதர் துணியை அணியக்கூடியவர்கள், அப்பேர்பட்ட பெரியவர்களுக்குரிய இடம் அது. அப்பேர்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு இடம் அது என்ற கருத்து இந்த ராஜ்யத்தில், தேசத்தில் நிலவிய காலம் உண்டு. காந்திஜியினுடைய லட்சியம், கனவு அது. அந்த லட்சியத்தை நிறைவேற்றக்கூடிய இடம் அது. இந்த தேசத்திற்குள்ள லட்சியமட்டுமல்ல அது. உலகம் முழுவதிலும் பரவக் கூடிய லட்சியம் அது. பல யுத்தங்கள் வந்தபிற்பாடு யுத்த நோய்க்கு உலகத்தில் மருந்து கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த அளவுக்கு ஒவ்வொரு தேசத்திலும் சுயதேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்தால், அதை நிர்ப்பந்தமாக வெளி தேசங்களில் விற்பனை செய்யவேண்டிவருகிறது. தங்கள் நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பதற்கு சந்தைக்கடைகள் தேடவேண்டியிருக்கிறது. அம்மாதிரி நிர்ப்பந்தமான சந்தைக்கடைகளாக உபயோகப்படுத்துவதற்காகத்தான் சிறு சிறு தேசங்களை பிடிக்கக்கூடிய ஆசை வருகிறது. சிறு சிறு தேசங்கள்தான் அம்மாதிரியான நிர்ப்பந்த சந்தைக்கடைகள். தங்கள் நாட்டிலுள்ளவர்களுக்கு தொழில் கொடுப்பதற்காக, நாட்டிற்கு தேவையான அளவை விட அதிகமாக பொருள்களை உற்பத்தி செய்தாலும்கூட, அவைகளை விற்பனை செய்வதற்கு நிச்சயமாக நிர்ப்பந்தமான சந்தைக் கடைகள் தேவையாக இருக்கின்றன. அந்த நிலைமை இருப்பதினால்தான் யுத்த நோய் ஏற்படுகிறது. இம்மாதிரி யுத்தத்தில் ஈடுபடக்கூடாது என்ற லட்சிய அடிப்படையில் ஒவ்வொரு தேசத்திலும் அந்தந்த நாட்டிற்கு தேவையான

[Sri M. S. Selvarajan] [30th April 1959

அளவிலே, தேவைக்கு அதிகமாக இல்லாமல், ஒவ்வொரு கிராமத்திலும் சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிலே இம்மாதிரி சிறு சிறு கைத்தொழில்களில் ஈடுபடவேண்டும். எல்லையை மீறி உற்பத்தியில் ஈடுபடாமல் இருக்கவேண்டுமென்றால், அந்த லட்சியம் கைகூடவேண்டு மெனில், கிராமங்களில் இருக்கக்கூடிய கிராமாந்திரத் தொழில்களை அபிவிருத்தி செய்வதுதான் சிறந்த வழி. மெஷினரிகளை எவ்வளவு அதிகமாக குறைக்க முடியுமோ, அதன் மூலம்தான் இத்தகைய லட்சியத்தி லிருந்து பிறழாமல் இருக்க முடியும். இந்த லட்சியத்தை பூர்த்தி செய்வதுதான் உலக நோய்க்கு, யுத்த நோய்க்கு கைகண்ட மருந்து. அத்தகைய நினைவு நிச்சயமாக உலகத்தில் பரிணமிக்கச் செய்யவேண்டும். அந்த லட்சியத்தை மனதில்கொண்டுதான் கதர் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது. அந்த லட்சிய அடிப்படையில்தான் அகில பாரத சர்வ சேவா சங்கம் பணியாற்றி வருகிறது. ஆகையால், அந்த இடத்திற்கு அதிகமான பேர்கள்கூட போக முடியாது. யார் நூற்பதற்குத் தயாராக இருக்கிறார்களோ, யார் சிட்டம் தயார் செய்து அதை நெய்து கதர் உடுத்துவதற்கு தயாராக இருக்கிறார்களோ, யார் தன்னுடைய சுய தேவையை தானே பூர்த்தி செய்துகொள்ள முடியுமோ அப்பேர்ப்பட்டவர்கள் கதர் அணிந்தால் போதுமானது என்ற முறையில் இயங்கக்கூடியது அகில பாரத சர்வ சேவா சங்கம். தாங்களே நூற்று, நெய்து, கதர் அணிய சக்தி யற்றவர்கள் கதர் அணிய வேண்டிய அவசியமில்லை என்றுகூட சொல்லு வதற்கு முடியும். அத்தகைய உன்னத லட்சியத்தில் அடிப்படையில் இயங்ககக்கூடியது அந்த சங்கம். ஆகவே, ராஜ்ய அளவிலே கதர் இலாகா என்று ஒன்று இருந்தால் கதர் சம்பந்தமான எல்லாவிதமான பணிகளிலும் அது ஈடுபட முடியும். கவர்ச்சிகரமான விளம்பரத்தில் அது மிளிர முடியும். இத்தகைய ஒரு இலாகாவை நிறுவி, கதருக்குரிய முக்கியத்துவத்தை அதிகப்படுத்தி, அதற்கான விளம்பரத்தில் ஈடுபட வேண்டுமென்பதுதான் சர்க்காரின் நோக்கம். மற்றும் எல்லா விதத்திலும் உத்தியோகஸ்தர் களுடைய கூட்டு முயற்சியைக் கொண்டு மாகாணம் முழுவதும் கதர்த் தொழிலுக்கு வாய்ப்பு அளிப்பதற்கு வசதி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் ராஜ்ய அரசாங்கம் இந்த கதர் இலாகாவை நிறுவியது என்று நான் கருதுகிறேன். அத்தகைய கதர் இலாகாவுடன், கிராமங் களிலுள்ள குடிசைக் கைத்தொழில்களையும் சேர்த்திருப்பது முற்றிலும் நியாயமானது. ஏனென்றால் இப்பேர்ப்பட்ட தொழில்களின் அபிவிருத்திக்குத் தான் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மான்யம் பெறுவதற்கு நமக்கு வசதி இருக்கிறது. இம்மாதிரி மான்யத்தைப் பெற்று வேறு சில தொழில்களுக்கு வசதி வாய்ப்பு செய்யலாம். மத்தியதரத் தொழில்கள் சம்பந்தப்பட்டவரை மத்திய மான்யம் மிகக் குறைவு. அல்லது இல்லை என்று சொல்லலாம். 4 கோடி ரூபாய் செலவு செய்து ஒரு சிமெண்டுத் தொழிற்சாலை ஏற்படுத்தினால் 400 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடியும். லட்ச ரூபாய் செலவு செய்தால் ஒரு குடும்பத்தினருக்குத்தான் வேலை வாய்ப்பு தந்து, வாழ்க்கை நடத்த வசதி செய்து கொடுக்க முடியும். ஆனால் ஒரு ராட்டினம் 7 ரூபாய் விலை. அதை "ஸப்ஸிடைஸ்டு ரேட்டில்" கொடுத்தால் $3\frac{1}{2}$ ரூபாய் விலையாகும். $3\frac{1}{2}$ ரூபாய் செலவில் ஒரு குடும்பமே ஜீவிப்பதற்கு வசதி செய்து கொடுக்க முடியும். அம்மாதிரி செய்தால் நாடு முழுவதிலும் கதர்த் தொழிலை பரப்புவதற்கு முடியும். வீட்டிலிருக்கக்கூடிய அனை வரும் இத்தொழிலில் ஈடுபடக் கூடும். இந்த லட்சியத்தைத்தான் அரசாங்கம் கைக்கொண்டிருக்கிறது.

(The hon. Member stopped his speech abruptly but was still standing.)

MR. SPEAKER: What is the hon. Member waiting for?

30th April 1959]

SRI M. S. SELVARAJAN : Conversation is going on here.

MR. SPEAKER : The hon. Member will please proceed with his speech.

* SRI M. S. SELVARAJAN : ஆகவே அகில பாரத சர்வ சேவா சங்கத்திற்கு இந்தப் பொறுப்பை விட்டு விடலாம் என்று ராஜ்ய அரசாங்கம் இந்தப் பொறுப்பை தள்ளி விட முடியாது. ராஜ்யமே ஏற்று நடத்தக்கூடிய பொறுப்பு இது என்று நான் கருதுகிறேன். ராஜ்ய அரசாங்கத்தின்கீழ் கதர் இலாகா ஒன்று நிறுவப்பட்டிருப்பதால் ராஜ்யம் முழுவதிலும் வேறு இலாகாக்களில் பணியாற்றக்கூடியவர்களும், உத்தியோகஸ்தர்களும் கதர் அணியக்கூடிய நிலைமையிலே தங்களையும் அறியாமலேயே ஒரு உணர்ச்சி அவர்களிடையே ஊர்ந்து வருவதை நாம் பார்க்க முடிகிறது. ராஜ்ய அரசாங்கத்திலும், மத்திய அரசாங்கத்திலும் பணியாற்றக்கூடிய உத்தியோகஸ்தர்களின் வீடுதோறும் கதர் மலிய வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். அத்தகைய கனவு காண்கிறேன். அத்தகைய கனவு நினைவானால் நிச்சயமாக இந்த ராஜ்யத்தில் மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு ஒரு வாய்ப்பு உண்டு. இனி இந்த இலாகாவில் பணியாற்றக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்கும் அல்லது வேறு இலாக்காக்களில் பணியாற்றக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பள உயர்வே அல்லது அலவன்ஸ் உயர்வோ கொடுப்பதானால், டிரஸ் அலவன்ஸ் என்ற பெயரால் கூப்பன் கொடுத்து கதர் விற்பனையை அதிகரிக்க வேண்டும். கதர் இப்பொழுது என்.ஜி.ஓ.-க்களுக்கும், மற்ற உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும் கடனுக் கதர் பெறுவதற்கு வசதி செய்து கொடுத்திருப்பதின் மூலம், கதருடைய அருமை பெருமைகளை அவர்கள் உணருவதற்கு முடிகிறது.

(Mr. Speaker sounded the gong.)

SRI M. S. SELVARAJAN : Two more minutes please.

இனிமேல் கொடுக்கக்கூடிய உயர்வு, அது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட உயர்வாக இருந்தாலும் சரி, அல்லது வேறு ஏதாவது கமிட்டி சிபார்சினால் கொடுக்கப்பட்ட உயர்வாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு டிரஸ் அலவன்ஸ் என்று கொடுக்கப்படுவதை எல்லாம் கதராகவே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவ்விதம் கொடுப்பதாக இருந்தால் கதர் விருத்தியடைவதற்கும் வழி செய்வதாக இருக்கும். அதோடு அவர்களுக்கும் வசதி செய்து கொடுப்பதாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில், நான் தெரிந்த மட்டில் கதர் இலாகாவில் வேலை செய்யக்கூடியவர்கள் அதிகமாக பெண்கள்தான் இருந்து வருவதாக தெரிகிறது. இது போதாது. படித்து வரும் பெண்களுக்குவேலை கொடுக்கும் கடமை நமக்கு இருக்கிறது. ஆகவே இனிமேலும் இந்த இலாகாவில் அதிகமான பெண்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். அதன் மூலமாக கதர் அபிவிருத்தி அடைய முடியும் என்று சொல்ல முடியும். அதிலும் குறிப்பாக அம்பர் சர்க்கா மூலம் தயாரிக்கப்படும் நூலை பெண்களுடைய ஆடைகளுக்காக மட்டும் உபயோகித்தால் நன்றாக இருக்கும். இன்றைக்கு நாட்டிலிருக்கின்ற நிலையை எடுத்துப் பார்த்தால் ஆண்களில் 100-க்கு 20 பேர் கதர் அணிகிறார்கள் என்றால், பெண்களில் 2 பேர்தான் கதர் அணிகிறார்கள். துணித் தேவை ஆண்களை விட பெண்களுக்கு அதிகம். பெண்கள் அதிகம் பேர் கதர் அணிய ஆரம்பித்தால் கதர் துணி அதிகமாக தேவைப்படும் என்று தெரிகிறது. ஆகவே அம்பர் சர்க்கா மூலமாக தயார் செய்யப்படும் நூலைக்கொண்டு நுணுக்கமான

முறையில் சேலைகள் தயாரித்தால் பெண்கள் அதை அதிகமாக உபயோகிப்பார்கள் என்பது நிச்சயம். அதற்கு சர்க்கார் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முடிவாக இந்த மசோதா இப்போது காலத்திற்குத் தகுந்தவாறு ஏழை மக்களுடைய பசியை போக்குவதற்கான முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக் கொண்டு, கதர் தொழிலையும், கைத்தொழிலையும் முன்னேற்றுவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதா மிகவும் முக்கியமானது என்பதையும் கூறிக்கொண்டு, இதை நான் வரவேற்கிறேன்.

* Sri V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். கிராம கைத்தொழிலும், கதரும் நம்முடைய மாகாணத்தில் நல்ல முறையில் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி ஒருவராலும் மறுக்க முடியாது. இப்போது இவைகள் எல்லாம் ஒருவாறு விஸ்தரிக்கப்பட்டு வந்த போதிலும் இந்த அபிவிருத்தி எல்லாம் கிராமங்களில் நடைபெற வேண்டும், வெறும் நகர்ப் புறங்களில் மட்டும் அபிவிருத்தி ஏற்படுவதினால் எந்த விதமான நன்மையும் இல்லை. அதிலும் இப்போது இருப்பதை விட இன்னும் நல்ல முறையில் அபிவிருத்தி நடைபெற வேண்டும். அதோடு கதரின் விலைகள் எல்லாம் குறைவான விலையில் கொடுப்பதற்கு வழி செய்யவேண்டும். இப்போது அம்பர் சர்க்கா விஸ்தரிக்கப்பட்டிருந்த போதிலும் விலைகள் எல்லாம் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு இன்னும் குறையவில்லை. அவ்விதம் விலை குறைந்தால்தான் ஏழை மக்கள் அனைவரும் இதை உபயோகித்துக் கொள்ள முடியும். ஆகவே கதரை இன்னும் நல்ல முறையில் அபிவிருத்தி செய்து குறைந்த விலைக்கு எல்லோருக்கும் கிடைக்கும்படியான அளவில் கொண்டு வரவேண்டும். அதற்குரிய வழிகளை எல்லாம் கண்டு பிடித்து வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இண்டஸ்ரீஸ் டிபார்ட்மெண்டு மூலமாக சிறு கைத்தொழில் அபிவிருத்தி நடந்து வருகிறது. மேலும் கூடுதலான அளவில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும். அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களில், போக்குவரத்து இல்லாத இடங்களில் எல்லாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். இம்மாதிரி அபிவிருத்தி வேலைகளை எல்லாம் செய்து நாட்டை முன்னேற்றுவதற்கு இந்த சட்டம் உதவும் என்று நம்புகிறேன். இதைப் பற்றி இன்னும் கூடுதலாக ஏதாவது பேச வேண்டுமென்றால், இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போய் பின்னால் இங்கு வரும் போது பேசிக்கொள்கிறேன் என்பதை தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

* The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, முதல் முதலாக கனம் அங்கத்தினர் சின்னத்துரை அவர்களுக்கு ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். இந்த கதர் விஷயத்தில் அரசாங்கத்திற்கும் சர்வ சேவா சங்கத்திற்கும் எந்த விதமான போட்டா போட்டியும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சர்வ சேவா சங்கத்தை ஆரம்பித்து வைத்ததே ஆச்சார்யா வினோபா பாவே அவர்கள் தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆச்சார்யா வினோபா பாவே அவர்கள், இந்த அரசாங்கம் கதர் விஷயத்தில் எடுத்திருக்கும் அக்கரையையும் வேலைகளையும் பார்த்து பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பழனியில் இருந்த போது அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும் சர்வசேவா சங்கத்தின் பிரதிநிதிகளையும் அழைத்து பல பிரச்னைகளையும் பற்றி பேசி கதர் அபிவிருத்திக்காக எந்த முறையில் எல்லாம் அரசாங்கம் ஈடுபடலாம் என்பதைப்பற்றியும் விஸ்தாரமாக பேசி, அதற்காக பல வழிகளையும் காட்டினார்கள். இது தவிர, கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். சில மாதங்களுக்கு முன்னால் திருப்பூரில்

30th April 1959] [Sri M. Bhaktavatsalam]

கதர் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட ஒரு அரங்கு சர்வ சேவா சங்கத்தினரே ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் சர்வ சேவா சங்கத்தின் பிரதிநிதிகள் அரசாங்கத்தின் பிரதிநிதிகள், கதர் சம்பந்தப்பட்ட ஊழியர்கள், கதர் உற்பத்தி செய்கின்றவர்களின் பிரதிநிதிகள் இவர்கள் எல்லாம் சேர்ந்து இருந்து மூன்று நாட்கள் அந்த அரங்கிலிருந்து கதர் அபிவிருத்தி சம்பந்தப் பட்ட பிரச்னைகளை எல்லாம் விவாதித்தார்கள். இவைகளை எல்லாம் சர்வ சேவா சங்கத்தினரே முழுமுயற்சி எடுத்து நடத்தினார்கள். இதிலிருந்து எல்லாம் அரசாங்கத்திற்கும் சர்வ சேவா சங்கத்தினருக்கும் எந்த விதமான வேறு பாடும் இல்லை என்பதை உணர்ந்து கொள்ளலாம். கனம் அங்கத்தினர் சின்னத்துரை அவர்களுக்கு வேண்டுமானால் இது சம்பந்தமான விஷயங்களில் தொடர்பு இல்லாமல் இருக்கலாம். ஆகவே இதில் ஏதோ தகராறு இருப்பதாக எண்ணவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் செல்வராஜன் அவர்கள், அரசாங்கத் தின் கதர் அபிவிருத்தி திட்டத்தால், சர்வ சேவா சங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் பாதிக்கப்படக்கூடாது, அதோடு சர்வ சேவா சங்கத்தின் கதர் உற்பத்தியும் பாதிக்கக்கூடாது என்று தெரிவித்தார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இப்போது இரண்டு வகையிலும் கதர் அபிவிருத்திக்காக திட்டங்கள் போடப்பட்டிருப்பதால் யாருக்கும் பாதகம் ஏற்பட்டு விடவில்லை. கதர் உற்பத்தி எல்லாம் இரட்டிப்பாகியிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இன்றைக்கு உண்மையிலேயே கதர் உற்பத்தி மிகவும் பெருகியிருக்கிறது. நாட்டில் வேலையில்லாது இருக்கின்ற ஆட்களுக்கெல்லாம் சர்க்காக்கள் கொடுத்து வருவதன் மூலமாக வேலை கிடைக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. 1946-லிருந்து எடுத்துக் கொண்டால் சர்க்கார் கதர் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதனால் யாருக்கும் பாதகம் ஏற்பட்டு விடவில்லை. இதனால் சர்வ சேவா சங்கத்திற்கும் எந்த விதமான வருத்தமும் கிடையாது, அவர்களுக்கு எந்த விதமான நஷ்டமும் கிடையாது. சென்னையில் கூட இப்போது அகில இந்திய காதி கமிஷனர் ஆதரவில் காதி கிராம உத்தியோக் பவன் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களிடம் கைத்தொழில் சாமான்கள் எல்லாம் கிடைக்கும். அங்கு குறிப்பாக நல்ல கதர் ரகங்கள் கிடைக்கின்றன. நல்ல கைகுத்தல் அரிசி கொடுக்கிறார்கள் நல்லெண்ணெய் விற்கிறார்கள். கைத்தொழிலில் தயாரித்த வெல்லம் விற்று வருகிறார்கள். சமீபத்தில் ஒரு கான்டீன் கூட ஆரம்பித்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இங்கு சர்க்கரை (சீனி) யினால் செய்யப்பட்ட ஸ்வீட்கள் கிடைப்பதில்லை என்றும், இங்கு வெல்லத் தில் செய்யப்பட்ட ஸ்வீட்கள் கிடைக்கிறது என்றும் தெரிகிறது. இவ்விதம் கான்டீன் ஆரம்பித்து நடத்துவதினால், அதன் பக்கத்தில் நடந்து கொண்டிருக்கக்கூடிய அன்னபூர்ண கான்டீனுக்கு போட்டியாக ஆரம்பித் திருக்கிறார்கள் என்று நாம் எண்ணக்கூடாது. இன்றைக்கு கிராம உத்யோக் பவன் என்பது சென்னையில் யாத்ரீகர்கள் வந்தால் முக்கியமாக பார்க்கவேண்டிய இடங்களில் ஒன்றாக விளங்குகிறது. இங்கு அதிகமாக கதர் விற்பனையாகிறது என்றால், அதனால் வேறு யாருக்கும் பாதகமில்லை. இது தவிர அரசாங்கத்தின் சார்பிலும் பல கதர் டிப்போக்கள் திறக்கப் பட்டிருக்கின்றன. இதனால் ஒருவருக்கொருவர் போட்டிபோடுகிறார்கள் என்று அர்த்தமல்ல. எந்த அளவுக்கு கதர் அதிகமாக விற்பனையாகிறதோ அந்த அளவுக்கு நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். அரசாங்கத்தின் திட்டங்களாக, எல்லா பிளாக் ஏரியாவிலும் கதரை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்ற முறையில் "இன்டென்ஸிவ் ஸ்கீம்" என்றும், "எக்ஸ்டென்ஸிவ் ஸ்கீம்" என்றும் ஆரம்பித்து கிராமங்களில் எல்லாம் அதிகமான அளவில் சர்க்காக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் இப்போது கதர் உற்பத்தி அதிக மாகியிருக்கிறது. சர்வ சேவா சங்கமும் இதைப் பற்றி நன்றாகதெரிந்து

கொண்டிருக்கிறது. ஆகவே இதன் மூலமாக அவர்களுக்கு எந்த விதமான பாதகமும் இல்லை. சர்வ சேவா சங்கத்தினரும் பல முறையில் வேலை செய்து வருகிறார்கள். நமது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தின் கீழ் வரும் வேலைகளைப் பற்றியும், கதர் இயக்கத்தில் அரசாங்கம் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருக்கிறது என்பதைப்பற்றியும் மற்ற ராஜ்யங்கள் எல்லாம் நமது அரசாங்கத்தைப் பாராட்டுகிறது. சமீபத்தில் நடந்த நாகபுரி காங்கிரஸ் மகாநாட்டில் நடந்த பொருட்காட்சியில் முக்கிய மாக கதர் சம்பந்தமாக பல அம்சங்கள் அங்கு இடம் பெற்றிருந்தன.

4-30 p.m. கனம் அங்கத்தினர்களுக்கு அவைகளைப் பார்ப்பதற்கு துரதிர்ஷ்ட வசமாக தொடர்பு இல்லை. அதைப்பார்ப்பதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் இல்லை. நான் போய்ப் பார்த்தேன். நான் போய்ப் பார்த்ததில் எல்லோ ருக்கும் அதில் ஒரு விழிப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது. இந்த ராஜ்யத்திலுள்ள சர்வ சேவா சங்கம், மற்றவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்கள் எல்லாம் நல்ல முறையில் விற்பனை ஆகிறது. அரசாங் கத்தின் கதர் இலாகாவால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் எல்லாம் அதிகப்படியான அளவுக்கு விற்பனை ஆகிறது. எந்த அளவுக்கு விற்பனை ஆகவேண்டுமோ அந்த அளவுக்கு விற்பனை ஆகி வருகிறது. எந்த லட்சியத்தில் அது உற்பத்தி செய்யப்பட்டு வந்ததோ அந்த அளவிலும் இப்பொழுது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் சிலர் சொல்லு கிறார்கள் காந்தியடிகளுடன் கதர் போய்விட்டது என்று. அது சரி இல்லை. இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்த்தால் இப்பொழுது எவ்வளவோ அதிகமாக உற்பத்தியாகிறது. கதர் தரமும் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். எந்த அளவுக்கு உற்பத்தியாகவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அதைவிட அதிக மான அளவில் இப்பொழுது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

கதர் உற்பத்தி செய்ய வேண்டுமானால் சர்க்கா வேண்டும். சர்க்காவை வைத்துக்கொண்டு உற்பத்தி செய்கிறவர்களுக்கு இப்பொழுது அதிகப்படி யான வருமானம் கிடைக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அதில் வேலை செய்யக்கூடியவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரக்கூடிய அளவில் சர்க்காவில் உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொல்லலாம். அதை இன்னும் எவ்வளவோ விஸ்தரிக்க வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது அம்பர் சர்க்காவையும் விஸ்தரிக்க வேண்டியதாக இருக்கிறது. அதிகப்படியான அம்பர் சர்க்காவை உற்பத்தி செய்யவேண்டியதாக இருக் கிறது. ஆனால் அப்படி உற்பத்தி செய்யமுடியவில்லை. அன்றுகூடக் கேள்வி நேரத்தில் தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார் இப்பொழுது அம்பர் சர்க்காவை உற்பத்தி செய்வதாக இருந்தால் வெளி நாட்டிலிருந்து சில சாமான்கள் வரவேண்டியதாக இருக்கிறது, அது வேண்டிய அளவில் இங்கு இல்லாத காரணத்தால் அதிகப்படியான அம்பர் சர்க்காவை உற்பத்தி செய்ய முடியவில்லை என்று. அந்த சாமான்கள் எல்லாம் வெளி நாட்டிலிருந்து வந்து விட்டால் இன்னும் அதிகப்படியான அம்பர் ராட்டைகளை இங்கே உற்பத்தி செய்து விடலாம். அதற்கு வேண்டிய திட்டமும் இடபட்டிருக்கிறது. எந்த அளவுக்கு உற்பத்தி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆகவே இப்பொழுது கதர் ஏராளமான அளவில் பெருகி இருக்கிறது. அவ்வாறு இன்னும் அதிகமாகக்கூட பெருக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையினால் அரசாங்கம் இதை சரியாக நடத்தவேண்டியதாக இருக்கிறது. இதற்கு அகில இந்திய காதி கமிஷன் சார்பாக ஒரு கமிட்டி ஏற்பட இருக்கிறது. அந்த ஸ்டாசுடரி கமிஷன் மூலமாக இந்த அரசாங்கம் உற்பத்தி செய்கிறது. அதனால் காதி அல்லது சர்வ சேவா சங்கம் இன்னும் விஸ்தரிக்க வேண்டிய

30th April 1959] [Sri M. Bhaktavatsalam]

தாக இருக்கிறது. அதற்கு அனுசரணையாக உற்பத்தியைப்பெருக்க ஏற்பாடாகி இருக்கிறது. சட்டபூர்வமாக ஒரு கமிஷன் அமைக்கப்பட வேண்டும் என்று இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கதர் இயக்கத்தில் போடப்பட்டிருக்கக்கூடிய உத்யோகஸ்தர்களுக்கு கதர் அபிவிருத்தியில் ஆர்வம், அக்கரை இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வது சரியல்ல. இங்கு வருவதற்கு முன்னதாக அவர்களுக்கு இருந்ததோ இல்லையோ அதைப்பற்றித் தெரியாது. இந்த இலாகாவுக்கு வந்த பிறகு அவர்களுக்கு கதர் அபிவிருத்தியில் நல்ல ஆர்வமும், அக்கரையும் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். நானே இதை கவனித்திருக்கிறேன். இப்பொழுது இருக்கக்கூடியவர்களுக்கு கதர் உற்பத்தியில் நம்பிக்கை இருக்கிறது. அதைப்பற்றி சந்தேகிக்க வேண்டியதே இல்லை. அவர்களுக்கு இதில் பக்தி இல்லை என்று சொல்லமுடியாது. அவர்களுக்கு இதில் பக்தி இல்லை என்று சொன்னால் அதை ஒப்புக் கொள்ள முடியாது. நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தால் இது வரையிலும் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கும். அங்கு வேலை செய்யக்கூடிய அதிகாரிகள் நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும்தான் வேலை செய்கிறார்கள். கதர் உற்பத்தியை இன்னும் மேலும் மேலும் பெருக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். நமது ராஜ்யம் இந்த வகையில் மற்ற ராஜ்யங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. நமது ராஜ்யத்தில் அதிகமாகி இருப்பதைக் கண்டு மற்ற ராஜ்யங்களும் இதைப் பின்பற்றி வருகிறது.

கிராமக் கைத்தொழிலைப் பொறுத்த மட்டில் நேரடியாக தொழில் இலாகாவின் மூலம் நடைபெற்று வருகிறது. சில இண்டஸ்ட்ரியல் கோவாபரேட்டிவ் சொசைடி மூலமாகவும் அல்லது தனி நபர் ஸ்தாபன மாக இருந்தாலும் அது எடுத்து நடத்தினால் அதற்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறோம். இதற்கெல்லாம் கூட இந்த கமிஷன் பயன்படும். கிராமக் கைத்தொழிலுக்கு ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் செலவழிந்து போய் விட்டது. இரண்டு மாதங்களுக்கு முன்பு நியமிக்கப்பட்ட கமிஷன் தலைவர் அவர்கள்கூட சொன்னார்கள் இதைப்பற்றி மத்திய அரசாங்கத் துடன் கலந்து பேசியதாகவும், இதற்கு என்று ஒதுக்கிய பணம் பூராவும் செலவழிந்து போய் விட்டது என்றும் இன்னும் எவ்வளவு தேவையோ அவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியதாகவும் சொன்னார். நமது ராஜ்யத்தில் கதர் அபிவிருத்தி இயக்கமும், கிராம கைத்தொழில் இயக்கமும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. நம்மைப் பொறுத்த மட்டில் மத்திய அரசாங்கம் செய்வதாக இருந்தாலும் சரி, அல்லது சர்வ சேவா சங்கம் செய்வதாக இருந்தாலும் சரி அல்லது தனி ஸ்தாபனம் செய்வதாக இருந்தாலும் சரி ஒன்றுக்கு ஒன்று இணைந்து செய்யவேண்டும். அப்பொழுதுதான் சிறந்த முறையில் நடைபெறும். அகில இந்திய கமிஷன் அளவில் வசதி அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த மசோதாவில் ஏதாவது குற்றம் குறைகள் இருந்தால் அதை பொறுக்குக் கமிட்டி பரிசீலனை செய்யும். இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கு இது வரையிலும் தாமதம் ஆயிற்று. அநேகம் பிரிவுகளை நல்ல முறையில் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்ததால் மூன்று அல்லது நான்கு மாதங்கள் கால தாமதம் ஆனாலும் பாதகம் இல்லை என்று கருதி இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி அங்கே பரிசீலனை செய்து சட்டம் நிறைவேறுவதற்கு காலதாமதம் ஆனாலும் அதனால் பாதகம் இல்லை என்று கருதி இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது. அங்கே ஏதாவது திருத்தம் செய்ய வேண்டியதாக இருந்தாலும் செய்துகொள்ளலாம். திருத்தங்களைப்பற்றி

[Sri M. Bhaktavatsalam] [30th April 1959

பொறுக்குக்கமிட்டி நன்ருகப் பரிசீலனை செய்வார்கள், நிச்சயமாக அவைகள் எல்லாம் கவனிக்கப்படும். ஆகவே பொறுக்குக் கமிட்டிக்கு இந்த மசோதாவை அனுப்ப வேண்டும் என்ற பிரேரேபணையை கனம் அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்ளுவார்கள் என்று நம்பி அப்படியே ஒத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : The question is—

" That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 members (16 members of the Legislative Assembly and 8 members of the Legislative Council) to consider the Madras Khadi and Village Industries Board Bill, 1959, and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri M. Bhaktavatsalam.
Sri T. K. Subbiah.
,, A. Vedarathnam.
Srimathi Kamalambuja Ammal.
,, P. K. R. Lakshmikantham.
Sri S. C. Sadayappa Mudaliar.
,, M. P. Periasami.
,, R. Chidambara Bharathi.
,, G. Narayanaswami Naidu.
,, R. Swaminatha Merkondar.
,, K. Gopala Kounder.
,, P. S. Ellappan.
,, K. R. Nallasivam.
,, N. Marudachalam.
,, A. Govindasamy.
,, T. S. Ramaswamy Pillai.

The motion was put and carried.

IV.—HON. SPEAKER'S CONCLUDING SPEECH.

Mr. SPEAKER : Now, we have been sitting in Ootacamund for the last 10 days. We have discussed the Electricity Board's budget. We have also discussed in great detail very many important Bills. Though they have been referred to Select Committees, hon. Members have expressed their opinion freely and given very valuable suggestions. To all hon. Members who

30th April 1959] [Mr. Speaker]

have enabled me to finish this session of 10 days in a very happy manner and in a very successful manner, I want to offer my sincerest thanks. I can also say that the attendance of the hon. Members in this session compares very favourably with the attendance in other sessions, and if I may be permitted to say, it is far better than what it was during the Budget Session in Madras. (Cheers.) Of course, there might have been various causes as to why they could not come to the Madras session. But the fact remains that we have had at Ootacamund on an average, 170 members. There are many people who have made this session a grand success. The district officials have been very kind and have attended to the comforts of the hon. Members in as best a manner as possible. They have taken the hon. Members to the various interesting places and areas round about Ootacamund like the Kundah Project, the Staff College, Wellington, Lawrence Memorial School, Lovedale, Wild Life Sanctuary, Mudumalai, Soil Conservation Schemes and many other things under great personal inconvenience to them. On your behalf, I should now like to offer our greateful thanks to all of them. (Cheers.)

We have been entertained rather lavishly by the Governor, by the Chairman of the Ootacamund Municipal Council and by a Committee of Hosts. To them all, we must offer our thanks. We must be very grateful to the English-speaking children of this place, the tribal groups and the various other people who have taken very great pains to entertain us. On your behalf and on my own, I shall tender my grateful thanks to all of them. (Cheers.)

To the Press, who have been always very kind to us and who have reported our proceedings in a very correct and nice manner, we shall always be grateful.

Last, but not least, I shall say how grateful we are to the public of Ootacamund who have come in such large numbers to witness our Proceedings. I do hope they have appreciated our work. I have already given figures relating to the number of visitors up to yesterday. Today, we have had 1,187 visitors who came to witness our proceedings, thus making a total of 6,003 visitors for these ten days. Of course, I must apologise to them for the incovenience caused. But I would request them to appreciate that it was because of the fact that we have not got enough accommodation for a large number of visitors. Therefore, we were forced to vacate the visitors' galleries sometimes every half an hour and sometimes every fifteen minutes. They will please excuse us when they realise that we had to do that in order to enable a large number of people anxious to come and witness our proceedings. It has been a very great pleasure to see

[Mr. Speaker] [30th April 1959

them all. I do hope they are pleased with us. I hope also that hon. Members will leave Ootacamund with very happy and pleasant memories. Whether we will come back here again is left to the hon. Members and I shall not express any opinion on that.

I now adjourn the House *sine die*.

The House then adjourned *sine die*.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules, Orders and notifications—Nil.

B.—Reports and other papers.

18. *Amendment to Rule* 1 *of the Madras Motor Vehicles Rules*, 1931, *issued in G.O. No.* 492, *Home, dated* 20*th February* 1959, *under section* 16 *of the Madras Motor Vehicles Act*, 1931. [*Laid on the table of the House under section* 16 (3) *of the Madras Motor Vehicles Act*, 1931 (*Madras Act III of* 1931).]

19. *Amendment to the Madras Commercial Crops Markets Rules*, 1948, *in regard to units of price quotations to be used in respect of notified commercial crops issued in G.O. Ms. No.* 1467, *Food and Agriculture, dated* 30*th March* 1959, *under section* 18 *of the Madras Commercial Crops Markets Act*, 1933. [*Laid on the table of the House under section* 18 (4) (c) *of the Madras Commercial Crops Markets Act*, 1933 (*Madras Act XX of* 1933).]

TRUTH ALONE TRIUMPHS

Appendix I.

[Vide answer to starred question No. 262 asked by Sri T. S. Ramaswamy Pillai (on behalf of Sri K. Sattanatha Karayalar) at the meeting of the Legislative Assembly held on 30th April 1959, page 692 supra.]

I

Statement showing the industries started in Tirunelveli district during the Second Five-Year Plan.

Serial number and name of the industry started.	*Cost of the scheme.*
	RS.
1 Wardha Ghani Demonstration Unit, Sankarankoil	13,930
2 Wardha Ghani Demonstration Unit, Kuruvikulam	13,930
3 Hand-pounding of paddy Industry, Tiruchendur	27,400
4 Wardha Ghani Demonstration Centre, Valliyoor	12,488
5 Distribution of hand-operated cotton gins at 50 per cent cost in Kuruvikulam	7,500
6 Saranjam Karyalaya at Pettai	1,51,850
7 Flaying Centre at Kuruvikulam	7,440
8 'C' Class Soap-making Unit in Sankarankoil	16,400
9 Ten 'D' Class Match Factories in Valliyoor Block	90,000
10 Formation of ten Industrial Co-operative Societies for Hand-pounding of Paddy Industry.	46,865
11 Formation of nine Industrial Co-operative Societies for Village Oil Industry.	1,20,010
12 Formation of eight Industrial Co-operatives for Pottery and Brick-making Industry.	2,79,049
13 Model Production Centre for Village Pottery at Karukurichi ..	15,021
14 Model Carpentry Workshop, Pattamadai	77,090
15 Demonstration-*cum*-Training Centres for weaving carpets and druggets out of sunnhemp fibre at Gopalasamudram.	19,270
16 Combined Carpentry and Blacksmithy Workshop with Mobile Units, Pettai.	4,79,435
17 Training Centre for the manufacture of fancy articles from one corai mats, Tirunelveli.	5,125
18 Training Centre for lace and embroidery, Palayamkottai ..	15,800
19 Training-*cum*-Work Centre for palmyrah fibre and brush-making, Kulasekarapatnam.	33,598
20 Demonstration Centre for palmyrah fibre extraction, Tiruchendur.	11,296
21 Training-*cum*-Service Centre for the manufacture of palm leaf products, Manapad.	15,560
22 Production Centre for manufacture of furniture from palmyrah stemstrips, Nazareth.	60,956
23 Demonstration-*cum*-Training Centre for aloe fibre, Naduvayal ..	28,810
24 Bullock shoe nail manufacturing unit, Cheranmahadevi ..	6,200
25 Appalam Production Centre	12,134
26 Establishment of a Government Silk Farm at Tenkasi	11,300

[30th April 1959

Serial number and name of the industry started.	Cost of the scheme.
	RS.
27 Sales-*cum*-Procurement Depot for handicrafts products, Tirunelveli.	34,000
28 Manufacture of cloth dolls at Palayamkottai	11,000
29 Training Centre for Sungadi Saree Printing	18,000
30 Development of bee-keeping industry at Sankarankoil	3,560
31 Industrial Colony at Pettai	4,00,000

II

Statement showing the industries proposed to be started in the Tirunelveli district in the Second Five-Year Plan.

Serial number and name of the industry proposed to be started.	Cost of the scheme.
	RS.
1 Leather Marketing Depot at Sankarankoil	19,000
2 'A' Type Gramodyog Sales Depot in Tirunelveli	6,642
3 'C' Type Gramodyog Sales Depot at Tenkasi	4,178
4 Scheme for spinning aloe fibre strings at Sendamangalam ..	3,610
5 Cottage Industries Salem Emporium at Tuticorin	80,547
6 Grant to Potters' Co-operative Society for the purchase of pug mill (Kilambasamudram Block).	8,500
7 Scheme for distribution of tools at 50 per cent cost in Koilpatti Block.	1,000
8 Grant to Viswakarma Society, Kuruvikulam, for purchase of equipments, etc.	5,500
9 Grant to Viswakarma Society at Puliamkudi in Vasudavanallur Block.	5,000
10 Grant to Karukurichi Potters' Co-operative Society for construction of shed, etc.	2,000
11 Grant to Viswakarma Co-operative Society for purchase of equipments, etc.	12,000
12 Scheme for distribution of potters' wheels at full cost	500

III

Statement showing the industries started in the Kanyakumari district during the Second Five-Year Plan period.

Serial number and name of the industry started.	Cost of the scheme.
	RS.
1 'C' class Soap-making Unit in Agasteeswaram Block	16,400
2 'C' class Soap Unit in Munchira Block	16,400
3 Wardha Ghani Demonstration Unit in Munchira Block ..	12.488
4 Formation of eight Industrial Co-operative Societies for hand-pounded rice.	11,855
5 Formation of five Industrial Co-operative Societies for village oil industry.	35,375

30th April 1959]

(15) *Transfer of workers.*—Union workers are not to interfere in the matter as transfers of workers are made in the interests of efficiency of administration and as such transfers will be made irrespective of the fact that the worker concerned is an office bearer of any union or not. However, any attempt to victimise an office-bearer by an unnecessary transfer will not be tolerated.

(16) *Reinstatement of two dismissed workers Natarajan and Gangadaran of Madras Electricity System.*—The workers concerned may appeal to the Board.

(17) *Restoration of the cut in wages effected for the strike on 4th January* 1958 *at the Basin Bridge Power House.*—The question will be examined by the Board sympathetically.

2. The Madras State Electricity Board were not able to accept the proposals of the workers on the following matters :—

(i) Raising the age of superannuation.

(ii) Grant of Risk allowance.

(iii) Grant of Dust allowance to 297 workmen integrated into Operation Subordinate Service.

(iv) Increased Dearness Allowance to 457 ex-Madras Electricity Supply Corporation staff absorbed into Operation Subordinate Service.

(v) Promotion on the basis of seniority.

Signed on behalf of the Federation—

V. G. Row.

S. C. Krishnan.

Signed on behalf of the Board—

S. K. CHETTUR,
Chairman.

T. A. VARGHESE,
Finance Secretary.

TRUTH ALONE TRIUMPHS

[30th April 1959

APPENDIX TO THE ANSWER.

	Name of the post.	*Present scale.*	*Proposed by Negotiating Committee.*	*Scale proposed by Federation representatives on 24th December 1958.*	*Proposed to be sanctioned.*
	(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.	RS.
		GROUP I.			
1	Mazdoor	18—1—25	29—1½—39½.	29—1½—39½.	28—1½—40
2	Anti-Malarial Mazdoor ..	20—1—30	Do.	Do.	Do.
3	Laboratory Helper ..	18—1—25	Do.	Do.	Do.
4	Fitter Mazdoor	20—1—30	Do.	Do.	Do.
5	Watchman	18—1—25	Do.	Do.	Do.
6	Gardener	Do.	Do.	Do.	Do.
7	Sweeper	Do.	Do.	Do.	Do.
8	Scavenger	Do.	Do.	Do.	Do.
9	Telephone Boy	Do.	Do.	Do.	Do.
10	Cleaner, II Grade ..	Do.	Do.	Do.	Do.
11	Lascar, II Grade ..	Do.	Do.	Do.	Do.
12	Nursing Orderly ..	Do.	Do.	Do.	Do.
13	Coal Mazdoor	20—1—30	Do.	Do.	Do.
14	Blue Printer Grade II.	18—1—25	36—2—52	Do.	Do.
15	Groundsman, B.. ..	20—1—30	Do.	Do.	Do.
16	Store Helper, Grade II.	Do.	Do.	Do.	Do.
17	Mazdoor (W.C.)	20—1—25	No recommendation.	Do.	Do.
18	Labour Helper (W.C.)	20—1—30	Do.	Do.	Do.
19	Fitter Mazdoor (W.C.)	Do.	Do.	Do.	Do.
20	Menial	18—1—25	Do.	Do.	Do.
		GROUP II.			
1	Blue Printer, Grade I.	25—1—40	36—2—52	36—2—50	36—2—50
2	Sanitary Maistry ..	25—1—35	Do.	Do.	Do.
3	Jr. Attendant (Filter House).	Do.	Do.	Do.	Do.
4	Windermate	Do.	Do.	Do.	Do.
5	Pump House Assistant.	Do.	Do.	Do.	Do.
6	Oiler	Do.	Do.	Do.	Do.
7	Cleaner, I Grade ..	Do.	Do.	Do.	Do.
8	Lascar, I Grade ..	Do.	Do.	Do.	Do.
9	Helper	Do.	Do.	Do.	Do.
10	Turbine Cleaner ..	Do,	Do.	Do.	Do.
11	Boiler House Attendant.	Do.	36—2—50	Do.	Do.

30th April 1959]

Serial number and name of the industry started.	Cast of the scheme.
	RS.
6 Formation of eight Industrial Co-operatives for Pottery and Brick-making Industry.	5,510
7 Blacksmithy and Carpentry Training Centre at Alagappapuram.	71,136
8 Tailoring and Embroidery Unit at Agasteeswaram	5,580
9 Tailoring and Embroidery Unit at Rajackkamangalam	5,580
10 Development of bee-keeping industry in Rajackkamangalam ..	2,060
11 Industrial Colony at Marthandam	2,91,000

IV

Statement showing the industries proposed to be started in the Kanyakumari district during the Second Five-Year Plan period.

Serial number and name of the industry proposed to be started.	Cost of the scheme.
	RS.
1 'B' Class Gramodyog Sales Depot at Nagercoil	5,782
2 Coir Training School at Ethamuzhi	1,81,900
3 Cottage Industrial Sales Emporium at Nagercoil	80,547
4 Scheme for distribution of tools to artisans at 50 per cent cost in Rajackkamanagalam Block.	600
5 Scheme for starting a screw pine industry in Munichira Block ..	8,460
6 Scheme for distribution of tools at 50 per cent cost in Munichira Block.	1,000
7 Scheme for starting a palm leaf product industry in Rajackkamangalam Block.	7,000
8 Scheme for starting a Printing and Dyeing Unit in Killiyoor Block.	10,000
9 Scheme for starting a Wooden Toy Manufacturing Unit in Thalakulam Block.	21,000
10 Scheme for deputing trainees to undergo training in Agasteeswaram Blacksmithy and Carpentry Unit from Thalakulam, Melpuram and Killiyoor Blocks.	3,000

APPENDIX II.

[*Vide* answer to starred question No. 271 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 30th April 1959, page 699 *supra*.]

Statement.

(1)	Total number on roll. Boys. (2)	Girls. (3)	Men. (4)	Women. (5)	Total. (6)
1 Hindu Orphanage, Adyar (attached to Sri Kapaleeswarar temple, Mylapore).	24	..	..	..	24
2 Poor Home and Orphanage (attached to Sri Dhandayuthapaniswami temple, Palni).	18	3	14	15	50
3 Orphanage maintained by Sri Subramaniaswamy temple, Tiruchendur, Tirunelveli district.	20	..	..	..	20
4 Orphanage maintained by Sri Swami Nellaiappar and Sri Kanthimathi Ambal temple, Tirunelveli.	25	67	..	..	92
5 Sri Meenakshi Orphanage, T. Kallupatti, maintained by Sri Meenakshisundareswar temple, Madurai.	17	..	..	..	17
6 Orphanage attached to Sri Srinivasa Perumal temple, Nachiarkoil, Kumbakonam taluk, Tanjore district.	17	..	..	..	17
7 Orphanage attached to Sri Navaneethakrishnaswamy temple, Sikkil, Nagapattinam taluk, Tanjore district.	14	..	..	..	14
8 Orphanage attached to Sri Vaidyanathaswamy temple, Vaitheeswaramkoil, Sirkali taluk, Tanjore district.	27	9	..	..	36
Total ..	162	79	14	15	270

TRUTH ALONE TRIUMPHS

APPENDIX III.

[Vide answer to starred question No. 276 asked by Sri T. S. Ramaswamy Pillai (on behalf of Sri K. Sattanatha Karayalar, Sri N. K. Palanisami, Sri M. P. Sarathi and Sri M. Kalyanasundaram) at the meeting of the Legislative Assembly held on 30th April 1959, page 704 supra.]

Agreement between the Madras State Electricity Board and the Representatives of the Tamilnad Electricity Workers Federation.

As a result of discussions between the members of the Madras State Electricity Board and the representatives of the Tamilnad Electricity Workers' Federation, both sides agreed upon the following terms as a solution of the present difficulties:—

(1) *Revision of scales of pay.*—The scales of pay of posts carrying a pay of less than Rs. 500 per mensem will be revised as shown in the Appendix with effect from 1st January 1959. The pay of the existing employees will be fixed in the revised scale at the stage next above their pay in the existing scale. They will also be allowed one advance increment in the revised scale for every three years of service, subject to the condition that the pay so fixed shall not exceed the pay they would have drawn had they originally started on the revised scales.

Nominal Muster Roll workers, Casual labour and Contingent staff with over one year of service as on 1st January 1959 and subsequently will be allowed an increase in wages by 12 naye Paise (twelve naye Paise only) per day.

(2) *Dearness allowance.*—In addition to the consequential increase in dearness allowance at the existing rates due to increase in pay or wages, all employees including Nominal Muster Roll workers, Casual labour and Contingent staff will get an increase in Dearness Allowance at a flat rate of Rs. 5 (rupees five only) per month with effect from 1st January 1959.

(3) *Night shift allowance.*—The workers who work for four hours and more between 10 p.m. and 6 a.m. next day will be given the allowance at the following rates :—

